பக்கங்கள்:10 விலை : 30/-

காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 08 புதன்கிழமை 24.11.2021 கதிர் 19

## இது ரகசியம் அல்ல!

சுமந்திரன் குழுவின் அமெரிக்க விஜயம் முடிந்துவிட்டது. இப்பத்தி எழுதிக் கொண்டிருந்த சமயத்தில் கனடாவின் ஒட்டாவா நகரில் கனேடிய வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளுடன் சுமந்திரன் – சாணக்கியன் இணை பேச்சு நடத்திக் கொண்டிருக்கும். 2

# படகு கவிழ்ந்து மாணவர்கள் உட்பட 6 பேர் சாவு; 17 பேர் உயிருடன் மீட்பு!

## சோகத்தில் மூழ்கியது கிண்ணியா



திருகோணமலை மாவட்டம், கிண்ணியா– குறிஞ்சாக்கேணிப் பகுதியில் நேற்றுக் காலை படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் மாணவர்கள் உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் உள்ளடங்கலாக 23 பேர் குறித்த படகில் பயணித்துள்ளனர்.

இந்த அனர்த்தத்தில் சிக்கிய 11 மாணவர்கள் உட்பட 17 பேர் உயிருடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட் 2



# துயிலும் இல்லம் மேல் சப்பாத்துக்கால்களால் மிதிக்கும்வரை இங்கு நல்லிணக்கம் ஏற்படாது

## நாடாளுமன்றில் சிறிதரன் எம்.பி. இடித்துரைப்பு

இறந்துபோன அந்த ஆத்மாக்கள் துயிலும் இல்லங்கள் மேலே நீங்கள் சப்பாத்துக்கால்களால் மிதிக்கும்வரை இந்த நாட்டில் அமைதி, சமாதானம், நல்லிணக்கம் ஏற்படப்போவதில்லை. நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்றால் உங்கள் இனவாதத்தை முதலில் தூக்கி வெளியே போடுங்கள். எமதுமக்கள் இழந்த தமது உறவுகளை நினைவுகூர அனுமதி கொடுங்கள். 2



## கிண்ணியா படகு விபத்து தொடர்பில் நீதியான விசாரணை நடத்த வேண்டும்

### நாடாளுமன்றில் சஜித் கோரிக்கை

கிண்ணியாவில் இடம்பெற்ற ‘படகுப் பாதை’ விபத்து சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார். 9

## புதிய அரசமைப்பு வரைவு சபையில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படும்

### அதில் எவ்வித இரகசியமும் இல்லை என்கிறார் பிரதமர்

புதிய அரசமைப்பு வரைவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சபையில் நேற்று தெரிவித்தார்.

ஜனாதிபதி, பிரதமர் அலுவலகம் உள்ளிட்ட நிறுவனங்களின் செலவினம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இவ்வாறு கூறினார்.

புதிய அரசமைப்பு வரைவு தயாரிக்கப்பட்டு வருகின்றது எனவும், அதில் எவ்வித இரகசியமான விடயங்களும் 2



## பூநகரியில் நேற்று சடலமாக கரை ஒதுங்கிய பாசையூர்வாசி



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.24

பூநகரி கடற்கரைப் பகுதியில் நேற்றுக் காலை மனித உடலம் ஒன்று கரை ஒதுங்கியது. அது நேற்று யாழ் ஆஸ்பத்திரி சவச்சாலக்குக் கொண்டுவரப்பட்டது. 9

## அமெ. பாதுகாப்புத் தரப்பினருடன் தமிழ்ப் பிரதிநிதிகளின் கலந்தாய்வு



வொஷிங்டனில் வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதியின் தலைமையில் தேசிய பாதுகாப்புக் கவுன்ஸிலின் மூத்த உறுப்பினர்கள் இருவரை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் 2



## கத்தி வெட்டில் விரல் துண்டிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., தென்மராட்சி, சாவகச்சேரி சந்தையில் இடம்பெற்ற கத்திவெட்டுத் தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்துள்ள 9

## காரைக்கால் – காங்கேசன்துறை இடையே அம்புலன்ஸ் படகுச்சேவை குறித்துப் பேச்சு

### புதுச்சேரி ஆளுநர் - தூதுவர் பாக்லே கலந்தாலோசனை

(ந.லோகதயாளன்)

காரைக்கால் மற்றும் காங்கேசன்துறை இடையேயான அவசர படகு ஊர்தி (Ambulance Boat) அறிமுகப்படுத்துவது தொடர்பாக 9

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமந்திரன் தலைமையிலான கூட்டமைப்பின் சட்ட நிபுணர் குழுவும், உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகள் குழுவும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துடன் கடந்த வாரம் பல சுற்று சந்திப்பு நடத்திய சமயம், அது கண்டு பொறுக்காத புலம்பெயர் பிரகிருதிகள் சிலர் அந்தச் சந்திப்புக்கள், கலந்துரையாடல்கள் தொடர்பில் எள்ளி நகையாடும் கருத்துக்களை முன்வைத்தனர். சமூக ஊடகங்களில் அவை பரவலாக ஓடித்திரிந்தன.

அவற்றில் ஒன்று – அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களத்தில் (வெளிவிவகார அமைச்சில்) இலங்கை விவகாரத்தை நேரடியாகக் கையாள்பவரான தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவிச் செயலாளர் பற்றியது.

அந்தப் பதவியில் இப்போது இருப்பவர் டொனால்ட் லூ. முன்னர் ரிச்சர்ட் பவுச்சர், றொபேர்ட் ஓ பிளேக், நிஷா தேசாய் பிஸ்வால் போன்றோர் அலங்கரித்த பதவி இது.

அந்தப் பதவிக்கு அடுத்த நிலையில், பிரதி உதவிச் செயலாளராக இருப்பவர் கெலி அம்மையார்.

சுமந்திரன் குழுவினர் அமெரிக்கா வந்து, கடந்த வாரம் இராஜாங்கத் திணைக்களத்துடனான பேச்சுக்களை ஆரம்பித்தபோது டொனால்ட் லூ மற்றும் கெலி அம்மையார் இருவருமே வொஷிங்டனில் இருக்கவில்லை.

இவர்கள் இருவரும் இல்லாத காரணத்தால் சுமந்திரன் அணியின் அமெரிக்க விஜயம் பயனற்றது. பிசுபிசுத்துப் போனது. அமெரிக்கப் பக்கத்தில் பிரதான தரப்பு இல்லாமல் இக்குழு நடத்தும் சந்திப்பு அர்த்தமற்றது என்றெல்லாம் பெரிய எடுப்பில் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது.

அவர்கள் கூறிய கருத்து உண்மைதான். இன்றைய நிலையில் இலங்கை விடயத்தில் அமெரிக்க தரப்பில் முக்கியமான தீர்மானங்களை எடுப்பதில் பிரதான பாத்திரங்களாக இருக்கக் கூடியவர்கள் இவர்கள்தான். இவர்கள் இல்லாமல் தமிழர் தரப்பு அமெரிக்காவில் இப்போது நடத்தியிருக்கக் கூடியதான எந்தப் பேச்சும் அர்த்தமற்றது என்பதும் உண்மைதான்.

ஆனால், அந்த இருவரும் கடைசியாக நேற்று முன்தினம் சுமந்திரன் குழுவுடன் பேச்சு நடத்தினார்கள் – முக்கியமான விடயங்களை விரிவாக ஆராய்ந்தனர் – என்பதுதான் பிந்திய செய்தி.

சுமந்திரன் குழுவை சமூக ஊடகங்களில் போட்டுத் தாக்கிய நமது பிரகிருதிகள் குழு இனி என்ன சொல்லப் போகின்றது? தெரியவில்லை. சில சமயம் இதனை அம்பலப்படுத்தியமைக்காக என்னை ஒரு பிடி பிடிக்கக் கூடும்.

அமெரிக்காவில் திங்கட்கிழமை பகல் (இலங்கையில் திங்கள் இரவு) நடந்த இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சட்ட நிபுணர் குழுவில் ஜனாதிபதி சட்டத்தரணிகள் எம்.ஏ.சுமந்திரன், கனகேஸ்வரன் ஆகியோரே பங்குபற்றினர். திருமதி நிர்மலா சந்திரகாசன் பங்குபற்றவில்லை. அவர் அச்சமயம் வொஷிங்டனில் இருக்கவில்லை.

உலகத் தமிழர் பேரவைப் பிரதிநிதிகளிலும் முன்னைய கூட்டங்களில் பங்குபற்றிய அறுவரில் மூவரே பங்கு பற்றினர். அதேசமயம் வேறு மூவர் புதிதாக அதில் கலந்து கொண்டனர். இன்னொரு முக்கியஸ்தர் பிரிட்டனில் இருந்தபடி பங்குபற்றினார். அவர் உலகத் தமிழர் பேரவையை இப்போது மையநாராக நின்று இயக்கும் சுரேன் சுரேந்திரன். அவர் சூம் வழியாக இணைந்து கொண்டார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் மத்திய தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவிச் செயலாளர் டொனால்ட் லூ, திடீர் விசிட் ஆக நேபாளம் சென்று விட்டு முதல்நாள்தான் வொஷிங்டன் திரும்பியிருந்தார். நேபாளத்தில் இருந்து திரும்பிய கையோடு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துக்குள் அவர் வருகைதர விரும்பவில்லை. கொரோனாத் தொற்று முன்னெச்சரிக்கையாக இருக்கலாம்.

அதனால் தமது விடுதியில் இருந்தபடி அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் நடந்த இந்தக் கூட்டத்தில் அவரும் சூம் மூலம் கலந்துகொண்டார். எனினும் அவருக்கு அடுத்த நிலையில் உள்ள கெலி அம்மையார் நேரில் கூட்டத்தில் பங்குபற்றினார்.

இலங்கையில் நடைபெற்ற விடயங்களுக்கு பொறுப்புக் கூறலை நிலை நாட்டும் நடவடிக்கைகளை அமெக்கா மேலும் உறுதியாக முன்னெடுக்கும் என்று அமெரிக்கத் தரப்பினால் தமிழர் பிரதிநிதிகளிடம் இந்தச் சந்திப்பின் போது, உறுதியாகக் கூறப்பட்டது என அறிய வந்தது.

மீளநிகழாமையை உறுதிப்படுத்துவதற்கு நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதும், நியாயமான அரசியல் தீர்வு ஒன்றை உருவாக்குவதும் மிக மிக அவசியமானவை என்பதை அமெரிக்கா உணர்ந்துள்ளது. அரசியல் தீர்வை ஏற்படுத்தும் விடயத்தில் அமெரிக்க எத்தகைய பங்களிப்பை, எந்த வடிவத்தில் அல்லது முறையில் ஏற்படுத்தலாம் என்பது குறித்து, மேற்படி தமிழ்ப் பிரதிநிதிகளுடன் நடந்த கலந்தாய்வுகள் மற்றும் பிற கலந்துரையாடல்கள், ஊடாட்டங்களின் முடிவில் அமெரிக்கா இனம் கண்டு, தீர்மானித்து, விரைவில் அறிவிக்கும் எனவும் தமிழர் தரப்புக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

ஆக, இலங்கை விடயத்தை ஒட்டி சில கொள்கைத் தீர்மானங்களை அடுத்த ஓரிரு மாதங்களில் எடுத்து அமெரிக்கா பகிரங்கப்படுத்தும்.

அப்போதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சட்ட நிபுணர் குழு – உலகத் தமிழர் பேரவை பிரதிநிதிகள் குழு ஆகியவை அமெரிக்காவில் நடத்திய கூட்டுச் சந்திப்புக்கள், முயற்சிகள், இந்தப் பேச்சுகள் வெற்றியா, தோல்வியா என்பதைத் தீர்மானிக்க முடியும்.

அதற்கு ஓரிரு வாரங்கள் முதல் ஓரிரு மாதங்கள் வரை நாம் காத்திருக்க வேண்டி நேரலாம். பார்த்திருப்போம்.

**– மின்னல் –**

## படகு கவிழ்ந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளனர். அவர்களில் 4 பேர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பழைய பாலத்துக்குப் பதிலாக புதிய பாலம் நிர்மாணிக்கப்படுவதால் கிண்ணியா – குருஞ்சான்குளம் ஆகியவற்றுக்கு இடையில் இந்தப் படகு சேவை ஈடுபடுத்தப்பட்டு வந்துள்ளது.

நீரில் மூழ்கியவர்களை மீட்டெடுக்கும் பணிகளில் கடற்படையின் சிறப்புப் படையணி, உடனடி செயற்பாட்டுப் படையணி, கடற் படையணி உள்ளிட்ட சில சிறப்பு அணிகளும், சுழியோடிகளைச் சேர்ந்த எட்டு குழுக்களும் களமிறக்கப்பட்டிருந்தன என்று கடற்படை ஊடக அதிகாரி தெரிவித்துள்ளார்.

சகு சஹீ (மூன்றரை வயது), சஹிலா (வயது 6), பரீஸ் பகி (வயது 6), சப்ரியா (வயது 30), ஹேப்துல் சாகர், எவ்.சரீன் (வயது 8) ஆகியோரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

## துயிலும் இல்லம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி. சி.சிறிதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கான செலவினத் தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்–

தமிழர்களின் பிரதேசங்களில் யுத்த காலத்தில் தமது உயிர்களைத் தியாகம் செய்த தமது குழந்தைகள், மாவீரர்களை அந்த மக்கள் நினைவுகொண்டு விடுவார்கள் என்பதற்காக பொலிஸாரும் இராணுவத்தினரும் ஒவ்வொரு மாவீரர் துயிலும் இல்லங்கள் முன்பாகவும் குவிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறு செய்வதன் மூலம் தமிழர்களின் மனங்களில் கலாசார ரீதியாக, பண்பாட்டு ரீதியாக அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கின்ற தமது வீரப்புதல்வர்களை மறக்கக்கூடியதொரு சூழல் வருமா? அல்லது சிங்கள மக்கள் இதனை விரும்புகின்றார்களா?

2016, 2017, 2018, 2019களில் கூட, இப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 2019இல் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னரும் கூட, எமது மக்கள் மிகவும் அமைதியாக மாவீரர் தினத்தை அனுஷ்டித்தார்கள். எந்தவிதமான இடைஞ்சலும் இந்த நாட்டில் ஏற்படவில்லை. இங்கே பல அமைச்சர்கள் விழாக்களை நடத்துகின்றார்கள். விளையாட்டுப்போட்டிகள் நடக்கின்றன. இதற்கெல்லாம் எந்தக் கொரோனாவும் இல்லை. ஆனால், மாவீரர் துயிலும் இல்லங்களுக்குள் மட்டும்தான் கொரோனா வருமென அந்த இடங்களில் இராணுவம், பொலிஸாரைக் குவித்து ஓர் அச்சுறுத்தலுடன் யுத்த பிரேதேசங்கள் போன்று இன்று வடக்கும், கிழக்கும் காணப்படுகின்றன.

தயவு செய்து இந்த நிலைகளை மாற்றுங்கள். முதலில் புரிந்துணர்வு வேண்டும், நாட்டில் ஓர் இணக்கப்பாடு வேண்டும் என்றால் மக்கள் மனங்களை வெல்ல வேண்டும்.

தமிழ் மக்களாகிய நாம் பாதிக்கப்பட்டுள்ளோம். நாம் எமது பிள்ளைகளை இழந்துள்ளோம். ஆகவே, நாம் எமது பிள்ளைகளை நினைக்கின்ற வணக்க முறைகளை நீங்கள் தடுப்பதன் மூலம் நீங்கள் எதனை அடையப் போகின்றீர்கள்? அன்புக்குரிய சிங்கள மக்கள் கூட இதனை எதிர்க்கவில்லையே?

2016, 2017, 2018, 2019ஆம் ஆண்டுகளில் எங்கேயாவது ஒரு சிங்கள பிரதேசத்திலே மாவீரர் தினத்துக்கு எதிராக சிங்கள மக்கள் யாரும் ஊர்வலம்கூட நடத்தவில்லையே? ஆனால், இந்த நாட்டிலே அரசியல் தேவைக்காக ஜனாதிபதியிலிருந்து அமைச்சர்கள் வரை தத்தமது அரசியல் தேவைக்கவே இதனை செய்கின்றார்கள் என்ற விடயம் இப்போது தெளிவாகத் தெரிகின்றது. ஆகவே இதிலிருந்து மாறுங்கள்.

நீதிமன்றக் கட்டளை பிறப்பிக்காமலே பொலிஸார் மாவீரர் நினைவேந்தலுக்கான தடைக் கட்டளைகளைக் கொண்டு வந்து தருகின்றனர். பருத்தித்துறை. சாவகச்சேரி, மல்லாகம் நீதிமன்றங்கள் பொலிஸாரின் விண்ணப்பங்களை நிராகரித்துள்ளன. ஆகவே, நீதிவான் கட்டளை இல்லாமலேயே, நீதிமன்றங்கள் அறிவிக்காமலேயே பொலிஸார் கட்டளைகளை வழங்குகின்றார்கள். கையெழுத்து வாங்குகின்றார்கள். இந்த நாடு மிக மோசமாகவுள்ளது. நாட்டின் நடவடிக்கைகள் பாதகமான சூழலில் போய்க்கொண்டிருக்கின்றது. தயவு செய்து சிந்தியுங்கள். இந்த நாட்டை அமைதிப்பூங்காவாக்க வேண்டும் என்றால் மாவீரர்களை நினைவு கூருவதற்குத் தடையில்லை என்பதனை அறிவியுங்கள் – என்றார்.

## புதிய அரசமைப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை எனவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

பிரதமர் நேற்று நாடாளுமன்றத்தில் ஆற்றிய முழுமையான உரை வருமாறு:–

உலகளாவிய கொரோனாத் தொற்று நிலைமைக்கு மத்தியில் நாம் அரசு என்ற ரீதியில் மக்களைப் பாதுகாப்பதற்கே முன்னுரிமை வழங்கினோம். மக்களின் பாதுகாப்புக்காக நாம் உரிய நேரத்தில் சகல தீர்மானங்களையும் மேற்கொண்டோம் என்பதனை நாம் உங்களுக்கு நினைவூட்ட வேண்டும்.

அப்பணியை நிர்வகிப்பதற்காக பிரதமர் அலுவலகம் மேற்கொண்ட பணிகளை நினைவூட்டும் முகமாகவே நான் இவ்விடயத்தைக் கூறுகின்றேன்.

கொரோனாத் தொற்றின் ஆரம்பத்தில் எமது அரசு அத்தியாவசிய சேவைகளுக்காக ஜனாதிபதி செயலணியொன்றை நிறுவியது. அந்த ஜனாதிபதி செயலணியின் ஊடாக பிரதமர் அலுவலகத்திலிருந்து எமது கண்காணிப்பின் கீழ் மக்களின் அத்தியவசிய சேவைகளை நிறைவேற்றுவதற்கும், மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் ஒரு நாளின் 24 மணிநேரமும் பிரதமர் அலுவலகம் செயற்பட்டது என்பதை நாம் உங்களுக்கு நினைவுபடுத்த வேண்டும்.

அத்துடன் நாம் கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்தோம். மக்களுக்கு அத்தியாவசிய சேவைகள் மற்றும் சுகாதார வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நாம் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் முன்நின்றோம். வைத்தியர்கள், பாதுகாப்புப் படையினர் ஆகியோர் அதற்காக தமது கடமைகளை நிறைவேற்றினர்.

கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலை நாட்டைக் கடுமையாகப் பாதித்துள்ளது என்பதை நாம் அறிவோம். பெரும்பாலான தொழில்கள் வீழ்ச்சியடைந்துள்ளன.

கொரோனாத் தொற்றிலிருந்து வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப அரசு இப்போது திட்டமிட்டுள்ளது. அதன்படி குறுகிய கால மற்றும் நீண்டகாலத் திட்டங்களை உள்ளடக்கிய வரவு – செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் இம்முறை சமர்பித்தார்.

மக்களின் சார்பிலான பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சி நாட்டுக்குத் தேவை. இந்தக் கடினமான சூழ்நிலையில் அம்மக்கள் மீண்டெழக் கூடியதொரு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

2019ஆம் ஆண்டில் நாம் வீழ்ச்சியடைந்த பொருளாதாரமொன்றையே பொறுப்பேற்றோம் என்பதையும் நினைவுகூர வேண்டும். இந்த ஆண்டுக்கான வரவு – செலவு திட்ட முன்மொழிவுகள் பொருளாதாரத்தை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வழமை போல் சொந்த அரசியலுக்காக விவாதம் செய்வதைப் பார்த்தோம். இருப்பினும் எதிர்க்கட்சிகளின் நேர்மறையான கருத்துகளுக்கு நாம் செவிமடுக்கின்றோம். நீங்கள் சாதகமான கருத்துக்களைக் கூறினால் அவற்றுக்குச் செவிமடுக்க நாம் தயாராக இருக்கின்றோம்.

இந்தத் தருணத்தில் நாட்டின் எதிர்காலத்துக்காக நாம் கூட்டாகத் தீர்மானங்களை எடுக்க வேண்டும். மக்களுக்காக அந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கு இந்த உயரிய நாடாளுமன்றத்தின் சகல உறுப்பினர்களுக்கும் திறன் உள்ளது.

2022ஆம் ஆண்டுக்கான புதிய வணிகங்களைப் பதிவு செய்யும் தொழில் முனைவோரிடமிருந்து நாம் எந்தப் பதிவுக் கட்டணத்தையும் வசூலிக்கப் போவதில்லை. புதிய வர்த்தக சிந்தனைகளுடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் கட்டியெழுப்ப கைகோர்க்குமாறு எமது நாட்டு இளைஞர்களை அழைக்கின்றோம். மேலும் நாட்டுக்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தருவதற்கும் பங்களிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மக்களுக்கு வாக்குறுதி அளித்தால், அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். ஏறக்குறைய 25 வருடங்களாக தீர்க்கப்படாத ஆசிரியர் – அதிபர் சம்பள முரண்பாட்டை இந்த வரவு – செலவுத் திட்டத்தில் தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். இந்த வரவு – செலவுத் திட்டத்தில் கல்விக்காக அதிக அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நாட்டின் எதிர்காலத்துக்காக இதையெல்லாம் செய்கின்றோம். சவால்களுக்கு மத்தியில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான எமது முயற்சிகளுக்கு நீங்கள் அனைவரும் ஆதரவளிப்பீர்கள் என நம்புகின்றோம்.

எதிர்க்கட்சிகளின் முன்மொழிவுகள் மற்றும் விமர்சனங்களை நாங்கள் உன்னிப்பாகக் செவிமடுத்தோம். சில விமர்சனங்கள் நியாயமற்றவை. சில விமர்சனங்களில் ஏதேனும் நியாயம் இருப்பின், அவற்றை நாம் ஏற்று திருத்திக்கொள்ள எந்நேரத்திலும் தயாராக உள்ளோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

அரசமைப்பு பற்றிப் பேசினீர்கள். நாம் இப்போது வரைவைத் தயாரித்து வருகின்றோம். அதனை நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் சமர்ப்பித்து விவாதிப்போம் என்பதை நினைவூட்டுகின்றேன். எனவே, இந்த விவகாரத்தில் இரகசியமாக எதையும் செய்யமாட்டோம் என்பதை நினைவுபடுத்த விரும்புகின்றேன் – என்றார்.

## அமெ. பாதுகாப்புத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டநிபுணர்கள், உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் கடந்தவாரம் சந்தித்துப் பேசினர். அப்போது எடுக்கப்பட்ட படம் இது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதிலும், பாதிக்கப்பட்டோர் தொடர்பில் பொறுப்புக் கூறலை நிலைநாட்டுவதிலும் அமெரிக்கா அதிக ஈடுபடு மற்றும் பங்களிப்பை வழங்குவதற்கான முன்முயற்சிகள் குறித்து இந்தச் சந்திப்பில் விரிவாக விவாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

# புதிய தேர்தல் சட்டம் இயற்றப்படாமல் மாகாணசபைத் தேர்தல் இல்லையாம்



## திட்டவட்டமாகக் கூறுகிறார் ஜி.எல். பீரிஸ்

மாகாணசபைத் தேர்தல் முறைமை தொடர்பில் புதிய தேர்தல் சட்டம் இயற்றாமல் மாகாணசபைத் தேர்தலை நடத்த முடியாது.

மாகாணசபைத் தேர்தல் தொடர்பிலான பிரச்சினைகளுக்கு நல்லாட்சியின் அரச தலைவர்கள் பொறுப்புக் கூறவேண்டும்.

உள்ளூராட்சிமன்ற தேர்தலை ஒருவருட காலத்துக்குப் பிற்போடும் உரிமை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சருக்கு உண்டு என வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

மாகாணசபைத் தேர்தலையும், உள்ளூராட்சிமன்ற தேர்தலையும் விரைவாக நடத்த அரசாங்கம் உரிய கவனம் செலுத்தியுள்ளது.

மக்கள் மத்தியில் செல்வதற்கு பயந்து நல்லாட்சி அரசாங்கத்தைப் போன்று தேர்தலை பிற்போட வேண்டிய தேவை எமக்குக் கிடையாது.

உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்துவதற்கு எவ்வித சட்ட சிக்கல்களும் கிடையா. கொவிட் - 19 பெருந்தொற்று பரவலை அடிப்படையாகக் கொண்ட சுகாதாரப் பிரச்சினைகள் மாத்திரம் காணப்படுகின்றன.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் கடந்த 2018 ஆம் ஆண்டு இடம்பெற்றது. உள்ளூராட்சிமன்றின் 4 வருட கால பதவிக்காலம் 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்துடன் நிறைவு பெறுகிறது.

அதனடிப்படையில் எதிர்வரும் மார்ச் மாதம் உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்த முடியுமா, முடியாதா என்ற தீர்மானம் அப்போதைய சுகாதார காரணிகளை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படும்.

உள்ளூராட்சிமன்றங்களின் பதவிக் காலம் நிறைவு பெறும் காலத்தில் இருந்து மேலும் ஒரு வருட காலத்துக்கு உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்தாமல் பதவி காலத்தை நீடிப்பதற்கான அதிகாரம் மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சருக்கு அரசமைப்பின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதில் சட்ட சிக்கல் காணப்படுகிறது. மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளமைக்கு நல்லாட்சி அரசாங்கத்தின் அரச தலைவர்கள் பொறுப்புக் கூற வேண்டும்.

மாகாணசபைத் தேர்தல் முறைமை தொடர்பிலான சிக்கல் நிலையை நல்லாட்சி அரசாங்கம் தேர்தலுக்கு பயந்து திட்டமிட்ட வகையில் உருவாக்கியது.

நல்லாட்சி அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை காலவரையறையின்றி பிற்போட்டுள்ளமைக்கு எதிராக நீதிமன்றத்தை நாடினோம். தேர்தல் முறைமையில் காணப்படும் சிக்கல் நிலைக்கு நாடாளுமன்ற மட்டத்தில் தீர்வுகாண வேண்டும் என நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

மாகாணசபைத் தேர்தல் முறைமை தொடர்பில் புதிய சட்டத்தை இயற்றாமல் மாகாணசபைத் தேர்தலை ஒருபோதும் நடத்த முடியாது.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான புதிய சட்டம் இயற்றுவது தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது மறுபுறம் தேர்தல் முறைமை தொடர்பில் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் செயற்பாடுகள் நிறைவு பெறும் தறுவாயில் உள்ளன.

ஆகவே, மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் வெகு விரைவில் சிறந்த தீர்மானம் முன்னெடுக்கப்படும். - என்றார்.

---

## ஐந்து பீடை கொல்லிகளுக்கு விதித்த தடை நீக்கப்பட்டது

கிளைபோசேட்டு உள்ளிட்ட பீடை கொல்லிகளின் பாவனை மற்றும் விற்பனையைத் தடை செய்து 2014 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தலை ரத்து செய்யும் புதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பீடை கொல்லிகள் பதிவாளர் ஜயக்கொடி ஆராச்சிகே சுமித்தினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் கடந்த திங்கட்கிழமை வெளியிடப்பட்டது.

இந்த நிலையில், குறித்த புதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டமை தொடர்பில், பீடை கொல்லிகள் பதிவாளரிடம் விளக்கம் கோருமாறு, விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே, அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(தொடர்புடைய செய்தி பக்.8 இல்)

---

## கடலுக்குக் குளிக்கச் சென்ற இளைஞன் மாவெல்லவில் நீரில் மூழ்கி பரிதாபச் சாவு

அம்பாந்தோட்டை, தங்கல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவெல்ல துறைமுகத்தில், கடலில் குளித்துக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார் என்றுதங்கல்லபொலிஸார்தெரிவித்துள்ளனர்.

சீனிமோதர பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயது இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். பிரேத பரிசோதனைக்காக தங்கல்ல வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் தங்கல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

## ஊழலால் உழைத்த சொத்துக்கள் சகலதும் அரசுடைமையாக்கப்படும்

### அரசு அறிவிப்பு

ஊழல் மோசடிகளின் மூலம் உழைக்கப்படும் சொத்துக்கள் அரசுடைமையாக்கப்படும் என நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி பிணை முறி மோசடியால் திரட்டப்பட்ட சொத்துக்கள் அரசுடைமையாக்கப்பட்டமை போன்று, ஊழல் மோசடிகள் மூலம் உழைக்கப்பட்ட சொத்துக்கள் என நிரூபிக்கப்பட்டால் அவை அரசுடைமையாக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான ஊழல் மோசடிகள் தொடர்பிலான தகவல்கள் கிடைக்கப்பெற்றால் அவற்றை வழங்குமாறு அவர் பொதுமக்களிடம் கோரியுள்ளார்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமென அவர் நாடாளுமன்றில் குறிப்பிட்டார்.

நாடு முழுவதிலும் உணவுப் பொருள் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இதன் மூலம் உணவுத் தட்டுப்பாட்டைத் தவிர்க்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

---

## இரத்தக் காயங்களுடன் ஆணின் சடலம் மீட்பு

கேகாலை, புளத்கொஹூப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹிக்கொட பிரதேசத்தில் இரத்தக் காயங்களுடன் ஆண் ஒருவரின் சடலத்தை புளத்கொஹூப்பிட்டிய பொலிஸார் மீட்டுள்ளனர்.

ஹிக்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயது நபரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பிரதேச மக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

பிரேத பரிசோதனைக்காக கேகாலை வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் புளத்கொஹூப்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

## கிழவியை மணப்பெண் ஆக்கிப் பார்க்கும் கதை போன்றதே வரவு - செலவுத் திட்டம்

### இம்ரான் மஹ்ரூப் கிண்டல்



அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டத்துக்கான வாக்கெடுப்பில் முஸ்லிம் கட்சிகளான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சித் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிலைப்பாடு எவ்வாறு அமையவுள்ளது என்பதில் மக்கள் கவனம் செலுத்தியுள்ள நிலையில் முஸ்லிம் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமைத்துவத்துக்கு கட்டுப்படாவிடின் அவர்களைக் கட்சியை விட்டு நீக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

குறிப்பாக இருபதாம் திருத்தம் உள்ளிட்ட அனைத்து வாக்கெடுப்பிலும் முஸ்லிம் கட்சித் தலைவர் அரசுக்கு எதிராகவும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுக்கு ஆதரவாகவும் வாக்களித்திருந்தார்கள்.

இவ்வாறு கட்சியின் தீர்மானத்தை மீறி அரசுக்கு ஆதரவாக வாக்களித்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அதை அவர்கள் செய்யவில்லை.

இந்த வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக சில ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூடக் கருத்துத் தெரிவிக்கின்றனர். நான் நாடாளுமன்றத்தில் கூறியமை போன்று இந்த வரவு - செலவுத் திட்டம் கூட கிழவியை மணப்பெண்ணாக்கும் கதை போன்றுள்ளது என நான் தெரிவித்திருந்தேன்.

---

## யாழ். பல்கலையில் இன்று ஆய்வுரை

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் இருந்து வெளியாகும் தென்னாசியக் கற்கைகளுக்கான இலங்கை ஆய்வேட்டின் (The Sri Lanka Journal of South Asian Studies) பத்திராதிபர் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் "புகையிலை அரசி: 1784 - 1844 வரையிலான காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஓர் அடிமை முறைச் சமூகம் இருந்தமைக்கான நிலைப்பாடு" (Tobacco Rani: The Case for a Jaffna Slave Society, 1784 -1844) என்ற தலைப்பிலான ஆய்வு உரை ஒன்று இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கிலே இடம்பெறவுள்ளது. இந்த ஆய்வுரையினை கனடாவின் ரொறொன்டோ பல்கலைக்கழகத்திலே பின் கலாநிதி நிலைப் படிப்புக்களை மேற் கொண்டிருக்கும் கலாநிதி மார்க் ஈ. பாம்போர்த் (Dr. Mark E. Balmforth) நிகழ்த்துவார். இந்த ஆய்வுரையினை அடுத்து ஆய்வுரையினை ஒட்டிய ஒரு கலந்துரை யாடலும் இடம்பெறும். இந்த நிகழ்விலே அனைவரும் கலந்து கொள்ளலாம்.*

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# சந்தி சிரிக்கும் சட்டங்கள்

**புதிய ஒரு சட்ட கொள்கை பற்றி இப்போது அதிகம் பேசப்படுகின்றது. அந்த சட்டக் கொள்கை யாது என்பதே பழத்த மக்களில் பலருக்கு இன்னும் புரியவில்லை. அதுதான் 'ஒரே நாடு; ஒரே சட்டம்' என்ற கோட்டா அரசின் புது கோஷம். அது என்ன ஒரே நாட்டில், ஒரே சட்டம் என்ற கேள்வி பழத்த மக்கள் மத்தியில் கூட இன்னும் உண்டு.**

**நாட்டின் மக்களிடையே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான சட்டம் இருக்கின்றதாம். இது பாகுபாடாம். ஆகவே அதை ஒழிக்க வேண்டுமாம். இதுதான் கோட்டா ஆட்சிப் பீடத்தின் கரிசனை.**

**அப்படி ஒன்றும் ஆளாளுக்கு வேறுபாடான சட்டம் ஏதும் இங்கு இல்லை. தனித் தனி இனக் குழுமங்கள் இடையே அவற்றுக்கென்று விசேட பழக்கவழக்கங்கள், பண்பாடுகள், வரலாற்றுக் கோலங்கள், வழக்காறுகள், தனித்துவங்கள் உண்டு. அவை தொடர்பான சட்டங்கள் குறித்துத்தான் சீறுகின்றது பௌத்த, சிங்களப் பேரினவாத வெறி கொண்ட இந்த ஆட்சிப் பீடம்.**

**சிறுபான்மையினரான முஸ்லிம்களுக்கென்று தனியான முஸ்லிம் சட்டங்கள் உள்ளன. அதேபோன்று வடக்குத் தமிழ் மக்களுக்கென தேசவழமைச் சட்டம் உள்ளது. இந்த சட்டங்கள் காலாதிகாலமாக அந்த மக்களின் பழக்க வழக்கங்கள், பண்பாடுகள், வழக்காறுகளை ஒட்டி எழுந்தவை. நூற்றாண்டு கடந்தும் நடைமுறையிலிருக்கும் சட்டங்கள் இவை. இவற்றின் மூலம் அந்தச் சிறுபான்மை இனங்கள் தமது இனத்தின் தனித்துவப் பண்பியல்புகளைத் தொடர்ந்து பேணி வருகின்றன. அது பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் கண்களைக் குத்துகின்றது. அவ்வளவுதான். தமிழர்களும் முஸ்லிம்களும் இந்த நாட்டில் நூற்றாண்டு கடந்தும் கடைப்பிடிக்கும் – அவர்களுக்கு என்றே விசேடமான – சட்டங்கள் மூலம் தமது தனித்துவத்தைப் பேணி வருகின்றார்கள். அதனை நீடிக்க விட்டு வைக்கலாமா, உடனே குழப்ப வேண்டும் என்ற நோக்கத்தில் முன்வைக்கப்பட்டு இருப்பதுதான் 'இந்த ஒரே நாடு; ஒரே சட்டம்'.**

**இந்த நாட்டுக்கு ஒரு சட்டம் தான் உண்டு. பெரும்பான்மையினரான பௌத்த, சிங்களவர்களை விட்டுவிட்டு, சிறுபான்மையினர் விசேட சட்டங்கள் மூலம் தங்கள் தனித்துவத்தைப் பேண அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று மேலாதிக்க வெறித்தனத்தில் எழுந்த கோட்பாடுதான் – கோஷம் தான் – இந்த 'ஒரே நாடு; ஒரே சட்டம்'.**

**அதை நடைமுறைக்கு கொண்டுவர உதவும் ஜனாதிபதி செயலணிக்குத்தான் தலைவராக பௌத்த, சிங்களப் பேரினவாதப் போக்கில் முன்னிலையில் திகழும் ஞானசார தேரர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.**

**சரி. வித்தியாசமாக இருக்கும் சட்டங்களை ஒருமைப் படுத்த முதல், இருக்கின்ற ஒருமைப்படுத்தப்பட்ட சட்டங்களை, இங்குள்ள நீதி முறைமைகள் மூலம் ஒரே மாதிரியாக நடைமுறைப்படுத்துகிறார்களா என்று பார்த்தால் அது மிகவும் நகைப்புக்கிடமானதாகவும் விசனமளிப்பதாகவே உள்ளது.**

**நாட்டில் இருக்கும் பயங்கரவாதத் தடை சட்டம் ஒன்றுதான். தொற்றுத் தடுப்புத் தொடர்பான சுகாதாரச் சட்டங்கள் ஒன்றுதான். இரண்டையும் காட்டி, மாவீரர் தின நிகழ்வுகளுக்குத் தடை வழங்குமாறு கோரி தமிழர் தாயகப் பிரதேசத்தில் பொலிஸ் நிலையங்கள் ஒவ்வொன்றும் பல்வேறு நீதிமன்றங்களில் விண்ணப்பித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் ஒவ்வொரு நீதிமன்றமும் ஒவ்வொரு விதமாக – பல சமயங்களில் ஒன்றுக்கொன்று நேர் முரணாக – உத்தரவுகளை விடுக்கின்றன. சில நீதிமன்றங்கள் பொலிஸார் கேட்டவற்றை முழுமையாக ஏற்று உத்தரவு பிறப்பித்தன. வேறு சிலவோ இது தொடர்பான பொலிஸ் விண்ணப்பங்களை அடியோடு நிராகரிக்கின்றன**

**ஒரே நாடு; ஒரே சட்டத்தைக் கொண்டுவர எத்தனிக்க முன்னர், இருக்கும் ஒரே சட்டத்தை, ஒரே மாதிரி நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தும் ஏற்பாட்டை இலங்கை செய்ய வேண்டும். அதற்கு பின்னர் ஒரே மாதிரிச் சட்டங்களை கொண்டு வருவது குறித்துச் சிந்திக்கலாம்.**

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் 37 மாணவர்களுக்குக் கொரோனா!

## கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் 37 மாணவர்களுக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளான மாணவர்கள் அனைவரும் அட்டாளைச்சேனை கொவிட் இடைநிலை முகாமில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர் என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணன் தெரிவித்துள்ளார்.

கொவிட் நிலைமை தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது–

கடந்த 3 தினங்களாக கல்முனை பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட கொவிட் பரிசோதனையில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 37 மாணவர்கள் கொவிட் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இலங்கையில் தற்போது கட்டுப்பாட்டு நிலைமை தளர்த்தப்பட்ட நிலையிலும் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையிலும் பல இடங்களில் கொவிட் தொற்று அதிகரித்த நிலைமையை காட்டியுள்ளது.

10 தொடக்கம் 20 வீதம் வரையான கொவிட் தொற்று அதிகரித்து காணப்படுகின்றது. இதனடிப்படையில் எமது கல்முனை பிராந்தியத்தில் 3 தினங்களாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் அடிப்படையில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 37 மாணவர்கள் கொவிட் தொற்று நோய்க்கு உள்ளாகியுள்ளனர்.

தொற்றுக்குள்ளான பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் அட்டாளைச்சேனை கொவிட் இடைத்தங்கல் முகாமில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் கொவிட் பரிசோதனையின் போது பொத்துவில் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த 11 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொவிட் தொற்றுக்கு உள்ளானவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களில் பெரும்பாலானோர் மொனராகலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். மேலும் பல இடங்களிலும் தொற்று அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

கல்முனை பிராந்தியத்திலும் தடிமன், காய்ச்சல் பரவலாகக் காணப்படுகின்றன என தகவல்கள் கிடைத்த வண்ணம் உள்ளன. ஆகவே, எமது பரிசோதனை நடவடிக்கையிலும் கட்டுப்பாட்டு செயற்பாட்டிலும் சற்று இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

பொதுமக்கள் இந்த நிலைமைகளை உணர்ந்தவர்களாகத் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதும் சுகாதாரப் பழக்கவழக்கங்களை மிக இறுக்கமாகக் கடைப்பிடியுங்கள். பல இடங்களில் சுகாதார நடைமுறைகளை மீறி பொதுமக்கள் ஒன்றுகூடுகின்றமை தொடர்பாக முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

எனவே இவ்வாறான செயற்பாடுகள் எமது சமூகத்துக்கு ஆரோக்கியமானது அல்ல என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். அநேகமாக தொற்றுக்குள்ளானவர்கள் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டவர்களாவர்.

எவ்வாறாயினும் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதன் ஊடாகவே இந்தத் தொற்றுக்களில் இருந்து நாம் பாதுகாப்புப் பெற முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

# பாடசாலை மாணவர்களுக்கு மல்லாவியில் பைஸர் தடுப்பூசி



முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி பிரதேசத்தில் பாடசாலை மாணவர்களுக்கு கொவிட் பைஸர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு யோகபுரம் மகா வித்தியாலயத்தில் மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் திங்கட்கிழமை 16 வயது மற்றும் 17 வயது பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதன்போது க.பொ.த. சாதாரணதர மற்றும் க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கே இவ்வாறு தடுப்பூசி ஏற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நாடளாவிய ரீதியில் அனைத்துப் பாடசாலைகளிலும் அனைத்து வகுப்பு மாணவர்களுக்குமான கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2021



'நாகரிகத்தின் வேர் காடுகள்தான். கூட்டங்களில் இருந்து விலகியிருந்து மரங்களுடன், ஆறுகளுடன், ஏரிகளுடன் ஒன்றாய்க் கலந்திருந்த மனிதர்களிடம் இருந்துதான் தலைசிறந்த கருத்துக்கள் வந்துள்ளன. காடுகளின் அமைதி மனிதனின் அறிவாற்றல் பெருக உதவியுள்ளது'

– இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)

காலைக்கதிர் Kalaikkathir

# மூவின மக்களும் சேர்ந்து கொள்ளையரை விரட்டிவிட்டு தூய அரசை நிறுவவேண்டும்!

## அஜித தேரர் திடசங்கற்பம்

யுத்தத்தை கொண்டாட விகாரைகளை அமைக்க வேண்டுமா? யுத்தத்துக்கும் தர்மத்திற்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை. யுத்தம் என்பது மனித கொலை. வாழ்க்கையை அனுபவித்து நிம்மதியாக வாழவேண்டிய தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என அனைவரும் அநியாயமாக யுத்தத்தில் கொல்லப்பட்டனர் என அஜித தேரர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

30 வருடமாக இது எமது நாட்டில் இடம்பெற்றது. தமிழ் சமூகத்துக்கும் சிங்கள சமூகத்துக்கும் முஸ்லிம் சமூகத்துக்கும் முழு இலங்கை சமூகத்துக்கும் 30 வருட காலமாகக் காணப்பட்ட பாரிய பிரச்சினை தான் யுத்தம்.



உண்மையாக சொல்லப்போனால் எம்முடைய சிறுபராயத்தில் இந்த சிங்கள தமிழ் பிரிவினைகள் இருக்கவில்லை. 12,15 வயதில் தான் எமது தலைகளிலும் இதனைத் திணித்தார்கள். எனக்கு நன்றாக நினைவுள்ளது. நாம் அந்த காலகட்டத்தில் தமிழ் வைத்தியரிடமே வைத்தியத்துக்குச் சென்றோம்.

எங்களுடைய வீட்டின் அடித்தளத்தை அமைத்தவர் தமிழ் தச்சுத்தொழிலாளி ஒருவர். தீபாவளி தினத்தன்று அந்த தச்சு தொழிலாளியின் வீட்டார் எம்முடைய வீட்டுக்கு உணவு வகைகளைக் கொண்டு வருவார்கள். எம்முடைய பண்டிகைகளில் நான் எனது அம்மாவோடு அவர்களுடைய வீடுகளுக்குச் சென்றுள்ளேன்.

இப்படித்தான் அந்த காலத்தில் தமிழ், சிங்கள உறவு எம் காலத்தில் காணப்பட்டது. எமக்கு இந்த பிரிவினைகள் தெரியாது. அவர்களிடம் இருந்தும் எம்மிடம் இருந்தும் அன்பு மாத்திரமே எமக்குத் தென்பட்டது.

அந்த ஒற்றுமையை உடைக்கத் தான் தமிழ் சிங்கள பாகுபாடே கொண்டுவந்தார்கள். அரசியல் நோக்கத்துக்காகவே இந்த பிரச்சினையை எம் மத்தியில் கொண்டு வந்தார்கள்.

அரசியல் பலத்தை தக்கவைத்துக் கொள்ளவே இதை செய்தார்கள். எமது நாட்டு மக்கள் இதை புரிந்து கொள்ள வேண்டும். 83 களில் ஜே.ஆர்.ஜயவர்தன மிகவும் மோசமான முறையில் இவற்றைக் கையாண்டார். தமிழ் மக்களைக் கொலை செய்தார்கள். கடைகளை தீவைத்து எரித்தார்கள். இருப்பவற்றை கொள்ளையடித்தார்கள். சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களுக்கு எதிராக ஒரு வைராக்கியத்தை உருவாக்கினார்கள். இன்று காஸுக்கு வரிசையில் அனைத்து மக்களும் நிற்கின்றனர். அனைத்து தாய்மாரும் பால் மாவிற்காக வரிசையில் நிற்கின்றார்கள். எரிபொருள் வரிசையில் நிற்கின்றார் கள். இன்று அனைத்துக்கும் வரிசை காணப்படுகின்றது. அரசியல்வாதிகள் விளையாடும் அரசியல் விளையாட்டுக்கு மக்கள் ஏமாந்து விடக்கூடாது.

மக்களின் சடலங்களின் மேல் அரசியல் பலத்தை தக்கவைத்துக்கொள்ள முயற்சிக்கும் அரசியல் நிறுத்தப்படவேண்டும். தமிழர் சிங்களவர் முஸ்லிம்கள் என அனைவரும் ஒன்றாக இணைந்து இந்த கொள்ளையர்களை விரட்டிவிட்டு ஒரு தூய அரசாங்கத்தை ஸ்தாபிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## கொழும்புக்கான மரக்கறி விநியோகம் இடைநிறுத்தம்

மலையகப் பகுதிகளில் விளைந்த மரக்கறிகள் கொழும்பு மொத்த சந்தைக்கு வரவில்லை என மொத்த வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். மரக்கறி வகைகளின் விலைகள் வரலாறு காணாத அளவில் அதிகரித்துள்ளதால் குறித்த நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உர நெருக்கடி காரணமாக மலையக விவசாயிகள் ஞாயிறு முதல் தம்புள்ளை, பேலியகொட மெனிங் சந்தை உள்ளிட்ட பொருளாதார நிலையங்களுக்குக் கையிருப்பில் உள்ள மரக்கறிகளை வழங்கும் நடவடிக்கையை இடைநிறுத்தினர்.

இதன் காரணமாக பேலியகொட மெனிங் சந்தை மற்றும் பல பொருளாதார நிலையங்களுக்கு விநியோகிக்கப்படும் மரக்கறிகளின் அளவு, குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அகில இலங்கை விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் மற்றும் மெனிங் வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி இதனைத் தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் மரக்கறி விநியோகம் ஸ்தம்பிதமடைந்துள்ள நிலையில், தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறிகளின் விலை மிக அதிகமாகக் காணப்படுகின்றது.

அதேபோல கட்டுகஸ்தோட்டை – மெனிக்கும்புர பொருளாதார மத்திய நிலையம் மற்றும் பல பொருளாதார நிலையங்களில் மரக்கறி வகைகளின் விலைகள் மிக அதிகமாகக் காணப்படுகின்றன.

மேலும், கொழும்பு – கோட்டையைத் தளமாகக் கொண்ட சில்லறை விற்பனை நிலையங்களிலும் விலை மிக அதிகமாகக் காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகின்றது.

## திஸ்ஸ குட்டி ஆராச்சி எம்.பிக்கு பேச அனுமதி மறுத்த சபாநாயகர்

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டி ஆராச்சிக்கு உரையாற்ற அனுமதிக்க முடியாது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.



ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன, நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையின் கீழ் ஆற்றிய உரைக்கு பதிலளிக்க குட்டி ஆராச்சி சில முறை சந்தர்ப்பத்தை கோரினார்.

ரோஹினி கவிரத்ன உரையாற்றிக்கொண்டிருக்கும் போது அவர் இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டி ஆராச்சி தனக்கு செய்த அவமதிப்பு பெண்களுக்கு செய்த அவமதிப்பாக கூறி, ரோஹினி கவிரத்ன, குட்டி ஆராச்சிக்கு மிகக் கடுமையாகப் பதிலை வழங்கி உரையாற்றினார்.

குட்டி ஆராச்சியின் பிறப்பு மாத்திரமல்லாது அவரது தாய், மனைவி பற்றியும் குறிப்பிட்டு மிக நிதானமாக ரோஹினி கவிரத்ன உரையாற்றியதுடன் குட்டி ஆராச்சியின் பேச்சை அங்கீகரிக்கின்றீர்களா என சபையில் இருந்த அமைச்சர்கள் பஸில் ராஜபக்ஷ மற்றும் தினேஷ் குணவர்தன ஆகியோரிடம் வினவினார்.

அப்போது ரோஹினி கவிரத்னவுக்கு தான் பதிலளிக்க சந்தர்ப்பம் வேண்டும் என குட்டி ஆராச்சி, சபாநாயகரிடம் அனுமதி கோரினார். ‘இன்று முடியாது நாளை சந்தர்ப்பம் தருகிறேன், உறுப்பினர் அமைதியாக இருங்கள்’ என சபாநாயகர், குட்டி ஆராச்சியை பார்த்து கூறியமையைக் காண முடிந்தது.

## ‘பைத்தியக்காரர்’ என்று சொல்லுமளவுக்கு கோட்டா ஆட்சியில் ஜனநாயகம் உள்ளது

### ஜோன்சன் பெர்னாண்டோ பெருமிதம்



‘பைத்தியக்காரர்’ என்று சொல்லும் அளவுக்கு கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் ஜனநாயகம் இருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

‘பைத்தியக்காரர்’ என்ற சொல்வதை அரசாங்கம் பிரச்சினையாக எடுத்துக்கொள்ளவில்லை என்று அரசாங்க கட்சியின் பிரதம அமைப்பாளர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தற்போதுதான் ஒன்றரை வருடங்கள் கழிந்த நிலையில் ஜனாதிபதியின் பெயர் நந்தசேன என்பது பலருக்கு நினைவுக்கு வந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சி சுமத்திய குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் போதே ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ இதனைக் குறிப்பிட்டார். இதேவேளை தேர்தலின் போது ‘தாம் அரசவாகனங்களை பெற்றுக்கொள்ள மாட்டேன்’ என்று கூறிய எதிர்க்கட்சித் தலைவர், இன்று அரச வாகனத்தையே பயன்படுத்துகிறார் என ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

## பஸிலுக்கு 151 மூளைகள் நளின் பண்டார தெரிவிப்பு

நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு 7 மூளைகள் அல்ல 151 மூளைகள் உள்ளன என்று எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.



ஆளும் கட்சியினர், பஸில் ராஜபக்ஷவுக்கு 7 மூளைகள் உள்ளன எனக் கூறிவருகின்றனர்.

எனினும் தம்மைப் பொறுத்தவரை, 151 மூளைகள் உள்ளன என எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

ஏனெனில் மூளையில்லாத 151 பேரை பயன்படுத்தி இரட்டை குடியுரிமை கொண்ட தமக்கு நாடாளுமன்றம் வருவதற்காக 20 ஆவது திருத்தத்தை தயாரித்தமை காரணமாக பஸில் ராஜபக்ஷவை 151 மூளைகள் உள்ளன எனவே தாம் கருதுகிறோம் என நளின் பண்டார குறிப்பிட்டார்.

கோட்டாபய பதவிக்கு வந்தால் பஸிலுக்கு, மஹிந்தவுக்கு, நாமலுக்கு விளையாட முடியாது என்று கூறப்பட்டது.

எதிர்க்கட்சியான தமக்கும் அந்த எண்ணம் இருந்தது. எனினும் இன்று அனைத்தும் இல்லாமல் போய் அரசாங்க கட்சியினருக்கு கிராமங்களுக்கு செல்ல முடியாதுள்ளதாக நளின் பண்டார குறிப்பிட்டார்.

## முள்ளிவாய்க்கால் நினைவுதினம் அனுஷ்டித்த 10 பேரின் விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிப்பு

மட்டக்களப்பு – கிரான் பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை மேற்கொண்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 10 பேரின் விளக்கமறியல் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

கல்குடா பொலிஸாரால் கடந்த மார்கழி 27 ஆம் திகதி இரு பெண்கள் உட்பட 10 பேர் கைது செய்யப்பட்ட வழக்கு திங்கட்கிழமை வாழைச்சேனை மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.பசீல் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இவ்வாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்படாத காரணத்தால் 12 ஆம் மாதம் 9 ஆம் திகதி வரை வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அங்கம் - 201

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**512. பரிகார நீதியாக ஏதும் வருமுன்னர் நடத்தப்படுகின்ற இனவழிப்பின் கட்டமைப்புக்களால் தமிழ் மக்கள் தலைக்கு மேல் வெள்ளம் வரும் நிலையில் உள்ளார்களே?**

உண்மைதான். சூழ்ந்து நிற்கும் வெள்ளம் மூக்குக்கு மேல் போகாமல் தடுப்பதற்கு பாயும்வெள்ளத்திற்கு அணை போடுவதா? அதற்கு தமிழ் மக்களுக்கு வழிவகைகள் உண்டா?

அல்லது கொஞ்சமாவது அவர்களது தேகங்களை உயரத்துக்கு ஏற்றி மூச்செடுக்கச் செய்யம் கூடிய நிலையிலிருந்து பரிகாரம் தேடுவதா?

வெள்ளத்திற்குஅணைபோடுவதற்கோ, தேகங்களை உயர்த்துவதற்கோ கூட ஆள் உதவி பத்தாது.இந்த நிலையில் உதவிக்கு வருபவர்களையே அடித்து விரட்டுகிறோம்.

எந்த திசையில் பயணிப்பது என்பது தமிழ் மக்கள் கூட்டாக மேற்கொள்ள வேண்டிய அரசியல் தீர்மானம்.

**513. சுமந்திரன் அமெரிக்காவின் பேச்சுவார்த்தைகளுக்கு போனமையும், கனடாவில் அவர் பெற்ற அனுபவங்களும், தமிழ் மக்கள் கூட்டாக மேற்கொள்ள வேண்டிய தீர்மானத்திற்கு வழிசெய்யுமா?**

சுமந்திரனின் அமெரிக்க பேச்சுவார்த்தைகளும் கனடாவில் நடந்தவை பற்றிய செய்திகளும் அபிப்பிராயங்களும் பலவாறு வந்துவிட்டன.

அந்தக் கூட்டத்தின் அமைப்பாளர்கள் என்ற முறையில் கனடிய தமிழ் காங்கிரஸ் வெளிப்படுத்திய அறிக்கையையும் அதைத் தொடர்ந்து இணைய தளங்களில் வந்த கருத்துக்கள், விமர்சனங்கள் அத்தோடு பரவலாக்கப்பட்ட வீடியோக்களையும் பார்க்கும் போது சுமுகமாக சென்று கொண்டிருந்த கூட்டத்தின் கடைசி நேரங்களில் இன விடுதலைக்கு எதிரான சில அரசு சார்புடைய கைக்கூலி



கள் அவற்றை நடத்தினார்கள் என தெரிவிக்கிறார்கள். வீடியோ பதிப்புக்களை பார்க்கும்போதும் அரங்கத்துக்கு வெளியே எதிர்ப்பில் நின்றவர்களையும் கொடிகளையும் கணக்கெடுக்கும் போது எதிர்ப்பு தெரிவித்தவர்கள் கைக்கூலிகள் என்று ஒதுக்கி விட முடியாது.

அதே சமயம் சுமந்திரனுக்கு மட்டும் எதிராக மிகமிக தெளிவாக "துரோகி", "இனத் துரோகி", "இனிமேல் கனடா பக் கம் வர யோசிக்க வேண்டாம்" என்ற கோஷங்கள் இருந்தன. "கைக்கூலிகள்" என பலரை தமிழ் மக்கள் ஒதுக்கியிருக்கிறார்கள்.அது போல் "துரோகி" என சர்வ சாதாரணமாக எவ்வளவோ பேரை போட்டுத்தள்ளியிருக்கிறார்கள்.

**514. இந்த அரசியல் பாதைகளில் நாம் அடைந்தவற்றை கணக்கிட முடியுமா?**

நடந்த சம்பவங்கள் வெட்கக்கேடானவை, வரவேற்கத்தக்கவையல்ல. ஒட்டு மொத்தமாகப் புலம்பெயர் தமிழ் மக்களுக்கு அவமானத்தைப் பெற்றுத் தந்துள்ளன. அவர்களைப் புலம்பெயர் நாடுகளின் அரசியல் கலாச்சாரத்தின் இடையே தலை குனிய வைத்திருக்கிறார்கள். ஆனால் அவை தமிழ் மக்களிடையே பேசித்தீர்க்



கப்பட வேண்டியவை. பொது வெளியில் மாற்றான் பார்த்து சிரிக்கும் வகையில் ஒற்றுமையீனத்தை எடுத்துக் காட்டுவது விவேகமல்ல.

ஆனால் இதனை ஒரு சம்பவமாக பார்ப்பதை விடுத்து காரண காரியங்களை ஆய்வுக்குட்படுத்தி பார்க்க வேண்டிய அவசியமும் உண்டு. சுமந்திரனை இந்தச் சம்பவத்தில் ஒரு தனி மனிதனாக பொருத்திப் பார்க்க முடியாது. தமிழ் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பிரதிநிதியாகவே பார்க்க வேண்டும். இவ்வாறிருக்கும் போது இந்நிகழ்வு அழுத்தக்குழுக்களாக இருக்கும் புலம் பெயர் தமிழர்களின் ஒரு தரப்பினருக்கும் அல்லது பலருக்கும் தற்கால ஸ்ரீலங்கா தமிழ் அரசியல் கொள்கைகளுக்கும் இடையில் ஒரு பலத்த இடைவெளி தோன்றியுள்ளது என்பதை வெளிப்படுத்தியது.

ஈழத்தின் தமிழ் அரசியல் பிரதிநிதிகள், அவர்களது சர்வதேச முனைப்புக்கள் தொடர்பிலான வெளிப்படைத் தன்மைகளை எவ்வாறு மேலும் வலுப்படுத்த வேண்டும் என்பதையும் புலம் பெயர் அமைப்புக்களுடனான கலந்தாலோசனைகளை எவ்விதம் கட்டியமைக்கப்பட வேண்டும் என்பதனையும் கருத்தில் கொள்வது இச்சம்பவத்தின் பின்னர் மீளவும் உணர்த்தப்படுகிறது.

அனைவரின் உடன்பாட்டையும்பெறுவது சாதகம் அல்ல. ஆனால் அனைவரையும் அணைத்தோ இணைத்தோ செயற்படுவது அவசியம். அதுதான் தலைமைத்துவத்தின் பண்பும் ஆகும்.

தமிழ் சமூகத்தின் பிரதிநிதிகள் காலம் தொட்டு அறிவு ஜீவிகளாக, ஆளுமை மிக்கவர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் நடத்தியது "அப்புக்காத்து அரசியல்" என வர்ணிக்கப்பட்டமை கூட உண்டு. ஆனால் சிறந்த தலைவர்களாக இருப்பதற்கு அறிவும் ஆளுமையும் மட்டும் போதுமானதல்ல. சமூக நல்லுறவும், சமூகத்தினரின் இயலுமை மற்றும் இயலாமை பார்க்காது அனைவரையும் இணைத்துச் செயற்படுவதே சிறந்த பிரநிதித்துவமாகும். இதனைச் சரிசெய்ய எடுக்கப்படும் எதிர்கால இணைப்புக்கள் பெரும்பான்மையான தமிழ் சமூகத்தை ஒரே கொள்கையோடு இணைக்கத் துணை புரியும்.

**515. இவை ஏன் நடந்தன?**

மேலைத்தேய நாடுகள் பலவும் – முக்கியமாக அமெரிக்கா, பிரித்தானியா போன்றவை தங்களது பிராந்திய அரசியல் கொள்கையை வகுத்து கொள்வதற்காக பொதுவாக அந்த பிராந்திய நாடுகளின் அரசு, அங்கிருக்கும் அமைப்புக்களிடமிருந்தும், தம் நாட்டிலே வாழ்வோர்களிடமிருந்தும் கருத்து கணிப்புகள் மேற்கொள்வது இயல்பு. அந்தந்த நாடுகளிலுள்ள அநேகமான அரசியல், சமூக அமைப்புக்களின் புள்ளிகளோடு ஊடாட்டம் அரச மட்டத்தில் நேரடியாகவும், அவர்களின் புலனாய்வுப் பிரிவுகளினாலும் மேற்கொள்ளப்படும். அந்தக் கருத்துக் கவனிப்புகளைக் கொண்டே அவர்கள் தங்களது ஆண்டறிக்கைகளை வெளியிடுவதும், அகதிகள் பற்றி தீர்மானங்கள் எடுப்பதும் வழமை.

இந்தச் சந்திப்புகளும் அமெரிக்க தரப்பிலிருந்து கருத்து கணிப்புக்காக எழுந்ததே. மனித உரிமைகள் பற்றி பழைய ஜனாதிபதி ட்ரம்புக்கு அதிக ஆர்வம் இருந்ததில்லை, அமெரிக்காவின் வளர்ச்சிக்கு அவர் எடுக்கும் முடிவுகளில் மனித உரிமை மீறல்கள் எவையாவது தோற்றம் தந்து, அவை கண்டிக்கப்பட்டதால், அவற்றை அவர் ஏற்காததால் அமெரிக்காவை ஐ.நா. மனித உரிமை மன்றிலிருந்தே அவர் வெளியேற்றியிருந்தார்.

இந்திய – பசுபிக் கடல் பிராந்தியம் சீனாவை கட்டுப்படுத்தவும், அமெரிக்காவினது வளர்ச்சிக்கும் அத்தியாவசியம் இருந்ததால் ஸ்ரீலங்காவிலும் மியன்மாரிலும் மனித உரிமை மீறல்களை பாவித்து ஆட்சி மாற்றங்களை அது ஏற்படுத்தியது. மியன்மாரில் ஆங் சாங் சூகீ பதவி ஏற்றார். ஸ்ரீலங்காவில் மைத்திரி ஜனாதிபதியாக, நல்லாட்சி அரசு அமைந்தது. .ஆனால் சில வருடங்களிலேயே சீனாவுக்கு நட்பாக நடந்தது. பழையபடி இந்திய – பசுபிக் பிராந்தியம் அமெரிக்காவுக்கு சவாலாகவே அமைய, அதற்காக எல்லாத் தரப்புகளோடும் இணைந்த கருத்து கணிப்பு, அவர்கள் மேற்கொள்ள வேண்டிய வரை படத்துக்கு தேவையானதால், பஸில் ராஜபக்ஷவும் கூட்டமைப்பினரும் இந்தக் கருத்து கணிப்பிற்காக அழைக்கப்பட்டனர்.

புதிய ஜனாதிபதி மனித உரிமைகளில் அக்கறை கொண்டு, அமெரிக்காவை திரும்பவும் மனித உரிமை மன்றில் இணைத்துக்கொண்டு அதற்கான பிரதிநிதிகளையும் அறிவித்துள்ளார்.

அமெரிக்கா உட்பட சர்வதேச நாடுகள் எல்லாமே இனப்பிரச்சினையை தமிழர் தேசியப் பிரச்சினையாக பார்ப்பதில்லை. மனித உரிமை கரிசனைக் கண்ணாடி கொண்டுதான் பார்க்கின்றன. இதனால் மனித உரிமை மீறல்கள் அடிப்படையில் தமிழர் விவகாரமாக இருக்கின்றமை



யால் அப்படியான கரிசனைகள் தமிழர் பால் செலுத்தப்படுகின்றன. அரசியல் தீர்வு விடயத்தில் அமெரிக்கா பகிரங்கமான ஒரு நிலைப்பாட்டை வெளிப்படுத்தியதில்லை. இணக்கமான சூழ்நிலையில் அதனது அதிகாரத்தை மேம்படுத்தவே விரும்பியது.

ஸ்ரீலங்கா அரசு பிடி கொடுக்காமல், கட்டுப்பாட்டுக்குள் வராமல், சீன சார்பை வெளிப்படையாக ஏற்படுத்தியதில்தான் அமெரிக்கா மனித உரிமை மன்றில் ஸ்ரீலங்காவுக்கு எதிரான பிரேரணையை ஆதரித்து 46/1தீர்மானம் வரைக் கொண்டு வந்தது. முதன்முறையாக அதன் தீர்மான அடிப்படையில் காங்கிரஸுக்கும் தீர்மானத்தை வடகிழக்கு தமிழரின் பிரதேசங்கள் என்ற அடிப்படையில் பிரேரித்தது. ஆனால் இந்தியா மட்டும்தான் ஸ்ரீலங்காவை சிங்களப் பகுதி, தமிழ்ப் பிரதேசம் என பிரித்துப் பார்த்து அரசியல் தீர்வு விடயத்தில் பகிரங்கமான ஒரு நிலைப்பாட்டைத் தெரிவித்தது.

**516. தமிழ் மக்கள் கூட்டான அரசியல் தீர்மானம் எடுப்பது என்றால் அதன் அணுகுமுறையென்ன?**

தமிழர் அரசியல் பரப்பிலே பல கோரிக்கைகள் இருக்கின்றன. சமஷ்டி முறையான அரசியல் யாப்பும் அதிகாரமும்தான் அவர்களிடையே தொடக்க காலத்திலிருந்து இருந்து வந்தன. பின்னர் தேசிய இன அங்கீகாரம், இறைமை அங்கீகாரம், சுயநிர்ணய உரிமை அங்கீகாரம், இவைகளுக்கான ஆட்சிப் பொறிமுறை, தாயக ஒருமைப்பாட்டைக் குறிக்கும் வகையில் வட கிழக்கின் இணைப்பு, அது அதிகார அலகாக அங்கீகாரம் பெறுவது, மத்திய அரசுடன் ஒரு தேசமாக பங்குபற்றுவதான சுய ஆட்சி என்று பலபல எழுந்தன.

ஆனால் இதுவரைக்கும் எல்லா தமிழ்ப் பரப்புகளும் அமர்ந்து, இணைந்து, எந்த அதிகாரங்கள் கொண்ட – உள்ளடக்கப்பட்ட – சமஷ்டி அமைப்பைக் கோருவது என்று தீர்மானிக்கவில்லை. பல நாடுகளிலுள்ள சமஷ்டி அரசுகள் சுட்டிக் காட்டப்படுகின்றன. ஆனால் அவற்றுள் தமிழ் மக்களுக்கு எது சாதகமானது, யதார்த்தமானது எனத் தீர்மானித்து, சர்வதேசத்துக்கு முன்வைப்பதற்கு என்று ஒன்றில்லை.

புலம் பெயர் அமைப்புக்களுடன் சேர்த்து அரசியல் தீர்வு பொதி ஒன்றுக்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டதில்லை. விடுதலைப் புலிகளால் நோர்வே பேச்சுவார்த்தைகளில் பாலசிங்கம் "சமஷ்டி அடிப்படையில்"தீர்வைப் பார்க்க இணங்கினார். பின்னர் இடைக்கால நிர்வாக அலகு முன்வைக்கப்பட்டது. இதுவே ஏற்றுக்கொள்ளப்படாது மஹிந்தா அதனைக் குழப்பி, சிங்கள பேரினவாதத்தோடு கைகோர்த்து, நீதிமன்றத்தின் மூலம் சந்திரிகா செய்த அந்த ஒப்பந்தத்தை நிராகரித்தார்.

ஆகவே அரசியல் தீர்வு என்பது சுமந்திரனதோ சம்பந்தனதோ அல்லது தமிழர் அரசியல் பரப்பிலுள்ள மற்றவர்களினதோ தனிப்பட்ட பிரச்சினையல்ல. பேச்சுவார்த்தைக்குப் பலம் வாய்ந்த நாடு அழைக்கின்றதென்பதால் தனி மனிதர்கள் தமிழ் மக்களின் எதிர் காலங்களைத் தீர்மானிக்கும் அதிகாரம் பெற்றவர்களாகி விட முடியாது. அரசியல் பிரதிநிதிகளும் பொது அமைப்பின் பிரதிநிதிகளும் மக்களும் கூட்டாக பேசி முடிவெடுக்க வேண்டியவை இவை.

(வளரும்)

# சர்வதேச முதலீட்டாளர்களின் வருகைக்கு எதிர்க்கட்சியின் பூரண ஒத்துழைப்பு தேவை

## எஸ்.பி. திசாநாயக்க கோரிக்கை



கொரோனா பாதிப்பு காரணமாக வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அரசாங்கமும் எதிர்க்கட்சியும் இணைந்து செயற்பட வேண்டும்.

அவ்வாறு இல்லாமல் முதலீட்டாளர்கள் வருவதைத் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது என எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2022 ஆம் வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இறுதி நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

நாடு பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்த நிலையில் அரசாங்கத்துடன் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டிய எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு மக்களை உசுப்பி விடும் நிலையே காணப்படுகிறது.

இந்நிலையில் நாட்டின் பொருளாதாரம் அன்றி கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கையே அதிகரிக்கும்.

பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நாட்டுக்குவரும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் சந்தேகத்தை நீக்குவதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளும் போது முதலீட்டாளர்கள் நாட்டுக்குவரும் சந்தர்ப்பங்களே இழக்கப்படும்.

கொரோனா வைரஸ் சூழ்நிலைக்குப் பின்னர் ஆசிய நாடுகளில் 1.2 ட்ரில்லியன் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தியா, சீனா, சிங்கப்பூர், வியட்நாம், பங்களாதேஷ் போன்ற நாடுகளிலேயே அந்த முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எமது நாட்டுக்கும் முதலீட்டாளர் வருகை தர வேண்டுமானால் எதிர்க்கட்சியின் பூரண ஒத்துழைப்பு அவசியமாகும். நாட்டில் அரசாங்கமும் எதிர்க்கட்சியும் இணைந்து செயற்படுவதை சர்வதேச சமூகம் பார்க்க வேண்டும் அப்போதுதான் நாட்டுக்கு சர்வதேச முதலீட்டாளர்கள் வருகை தருவர்.

அரச அதிகாரிகள் மத்தியில் உள்ள பயம் நீக்கப்படவேண்டும். அமைச்சர்கள் அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசமைப்பின் 52.2 இல் அமைச்சர்கள் எடுக்கக்கூடிய தீர்மானம் தொடர்பில் சரத்துக்கள் உள்ளன.

அதனை முறையாகப் பயன்படுத்தி அதிகாரிகள் பயமின்றி செயற்படுவதற்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பது அமைச்சர்களின் பொறுப்பாகும். - என்றார்.

# இராணுவம் நாட்டுக்கு சுமை என்ற கூட்டமைப்பின் கருத்தை பொது எதிர்க்கட்சி ஏற்றுக்கொள்கின்றதா?

## காஞ்சன கேள்வி



நாட்டிற்கு இராணுவம் சுமை என்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கருத்து தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் தமது நிலைப்பாட்டைக்கூற வேண்டும்.

இதுவா பொது எதிர்க்கட்சியின் நிலைப்பாடு என சபையில் கேள்வி எழுப்பிய இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜயசிறி, மாகாணசபைத் தேர்தல், உள்ளூராட்சி சபை தேர்தல், ஜனாதிபதி தேர்தலை நடத்த முன்னர் நாடாளுமன்ற தேர்தலை நடத்துவோம். மீண்டும் மக்கள் ஆணையை கேட்போம் எனவும் அவர் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இறுதிநாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

நாட்டுக்கு இராணுவம் சுமை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் சபையில் கூறுகின்றார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இந்த கருத்து தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் தமது நிலைப்பாட்டைக் கூற வேண்டும்.

இதுவா பொது எதிர்க்கட்சியின் நிலைப்பாடு என்பதைக் கூற வேண்டும். கூட்டமைப்பினர் இவ்வாறு சபையில் கூறுகையில் அதனை எதிர்த்து எவருமே கருத்துத் தெரிவிக்கவில்லை.

இன்று நாம் பல சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றோம், ஆனால் சவால்களைக் கண்டு நாம் அஞ்சவில்லை. பல சவால்கள், நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து மீண்டு வருகின்றோம்.

நாட்டுக்குள் மீண்டும் டொலர்களை கொண்டுவரும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதனை குழப்பவே எதிர்க்கட்சிகள் முயற்சிக்கின்றனர்.

நாம் தேர்தல்களுக்கு அஞ்சவில்லை. மாகாணசபைத் தேர்தலை, உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்துங்கள், ஜனாதிபதி தேர்தலை நடத்துங்கள் என எதிர்கட்சியினர் கூறுகின்றனர். அதற்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவோம்.

இரண்டரை ஆண்டுகளில் நாடாளுமன்றத்தை கலைக்க முடியும், எனவே மீண்டும் நாடாளுமன்ற தேர்தலை நடத்தி மக்கள் ஆணையை பெற்றுக்கொண்டு ஆட்சியை அமைக்க போட்டியிடுவோம். - என்றார்.

# வவுனியா - காத்தார் சின்னக்குளம் மக்களுக்கு காணி உறுதிப்பத்திரம்

சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ் வவுனியா, காத்தார் சின்னக்குளம் கிராம மக்களுக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட காத்தார் சின்னக்குளம் கிராமத்தில் வாழ்ந்து வரும் மக்கள் தமது காணிக்கான உறுதிப்பத்திரங்களின்றி கடந்த 35 வருடங்களுக்கு மேலாகப் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இந்நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ் காணியற்ற மக்களுக்கு காணிக்கான உறுதிப்பத்திரங்கள் வழங்கல் திட்டத்தின் அடிப்படையில் குறித்த கிராமத்தில் காணி உறுதிப்பத்திரங்கள் இல்லாத நிலையில் இருந்த 26 குடும்பங்களுக்கு அவை வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன், மேற்படி கிராமத்தில் பாலர் பாடசாலையில் கல்வி பயிலும் 34 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன், வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன், கிராம அலுவலர் எஸ்.தர்சன், அபிவிருத்திக் குழு தலைவரின் இணைப்பாளர் கே.டினேஸ் உள்ளிட்ட அதிதிகள் கலந்துகொண்டு காணி உறுதிப்பத்திரங்கள் மற்றும் கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.





# நாட்டின் ஆட்சியாளர்களுக்கு ஒழுக்கம் மிகவும் அவசியம்

நாட்டை ஆட்சி செய்யும் கட்சிக்கு ஒழுக்கம் இருக்க வேண்டும் எனவும் ஒழுக்கம் இல்லாத கட்சி நாட்டை ஆட்சி செய்வதாலேயே, நாட்டில் பல நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன எனவும் மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய செயற்குழு உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணி நாடு முழுவதும் முன்னெடுத்துள்ள 'கிராமத்தில் இருந்து ஆரம்பிப்போம்' வேலைத்திட்டத்தின் கூட்டம் நாவலப்பிட்டி பிரதேசத்தில் நடைபெற்றது. அதில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே பிமல் ரத்நாயக்க இதனைக் கூறியுள்ளார்.

பல்வேறு அரசியல் கட்சிகளை சேர்ந்த நபர்கள் தமது கட்சிகளுக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர். எமது கட்சிக்கு வேறு எந்தக் கட்சியுடனும் தொடர்பில்லை. எமது கட்சி தனியாகவே மக்கள் மத்திக்கு வந்துள்ளது.

அதேவேளை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள நனோ திரவப் பசளை கொள்வனவில் மிகப் பெரிய மோசடி நடந்துள்ளது எனவும் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# பக்கவிளைவின்றி அவரவர் வீடுகளிலேயே தொற்றாளருக்கு சிகிச்சையளிக்க முடியும்

## வைத்தியர் இந்திக கருணாதிலக தெரிவிப்பு

பெரும்பாலான கொவிட் - 19 நேர்மறை நோயாளிகள், நேர்மறை சோதனைக்குப் பிறகு வைத்திய ஆலோசனையை சரியாகப் பின்பற்றினால், எந்தப் பக்க விளைவுகளும் இல்லாமல் வீட்டிலேயே சிகிச்சை அளிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவக் கல்வியின் பேராசிரியர் வைத்தியர் இந்திக கருணாதிலக இதனைத் தெரிவித்துள்ளார்.

கொவிட் நோயாளிகளுக்காக 247 மற்றும் 1904 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பான சமீபத்திய தரவுகளிலிருந்து இது தெளிவாகிறது எனவும் அவர் இதன் போது கூறியுள்ளார்.

247 திட்டத்தின் மூலம் 60 ஆயிரம் நோயாளிகள் அவதானிக்கப்பட்டனர், 1,200 பேருக்கு மட்டுமே அவசர அம்புலன்ஸ் சிகிச்சை தேவைப்படுகிறது,

அதேவேளை 1904 திட்டத்தின்



கீழ் 30 ஆயிரம் நோயாளிகள் கண்காணிக்கப்பட்டனர் எனவும், 800 பேர் அவசர சிகிச்சை தேவைப்படும் நபர்களுடன் கண்காணிக்கப்பட்டனர் எனவும் டாக்டர் கருணாதிலக கூறினார்.

கொவிட் நோயாளிகள் உள்ளார்ந்த நோய்கள், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், ஆஸ்துமா மற்றும் வயதான குழுக்கள் நிமோனியா நோயால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றமையால் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று வைத்தியர் கருணாதிலக குறிப்பிட்டார்.

# படையினரைக் குவித்து துயிலுமில்லங்களை மறைத்தால் தமிழர் அவர்களின் வீரப் புதல்வர்களை மறந்துவிடுவரா?

## சிறிதரன் எம்.பி. கேள்வி

மாவீரர் வாரம் ஆரம்பமாகியுள்ள நிலையில், வடக்கு, கிழக்கில் மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு முன்பாக படையினர் குவிக்கப்பட்டுள்ளமை தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இந்த விடயம் தொடர்பாகக் கேள்வி எழுப்பியுள்ளார்.

மாவீரர் வாரம் ஆரம்பிக்கப்பட்டவுடன், மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு முன்பாக இவ்வாறு படையினரைக் குவித்து, மாவீரர் துயிலும் இல்லங்களை மறைப்பதன் மூலம், தமிழர்கள் அவர்களின் வீரப்புதல்வர்களை மறக்கக்கூடிய சூழ்நிலை வருமா என்றும் அல்லது சிங்களவர்கள் இதனை ஏற்றுக்கொள்கிறார்களா என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

2016 - 2018 வரை மட்டுமன்றி 2019ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பின்னரும்கூட மாவீரர் தினத்தை விளக்கேற்றி அனுஷ்டித்தார்கள் என்றும் எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை என்றும் தெரிவித்த அவர், தற்போதுதான் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டினார்.

நாட்டில் விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றன என்றும் இதற்கு கொரோனா கட்டுப்பாடுகள் இல்லை என்றும் தெரிவித்த அவர், ஆனால், மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு மட்டுமே கொரோனா கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன என்றும் இந்த நிலை மாற வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



## பீடைகொல்லிகளுக்கான தடை தொடர்ந்தும் அமுலில் இருக்கும்

### மஹிந்தானந்த திட்டவட்டம்

க்ளைபோசேட் உள்ளிட்ட 5 பீடைகொல்லிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற அமர்வில் நேற்று (செவ்வாய்க்கிழமை) உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

க்ளைபோசேட் உள்ளிட்ட 5 பீடைகொல்லிகளை பயன்படுத்தல் மற்றும் விற்பனையை தடை செய்யும் வர்த்தமானியை ரத்து செய்யும் வகையில் திங்கட்கிழமை இரவு அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்தது.

இதனையடுத்து, பீடைக்கொல்லி பதிவாளர் பதவியிலிருந்து கலாநிதி ஜே.ஏ.சுமித் நீக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(தொடர்புடைய செய்தி பக் . 10 இல்)

## எரிபொருள் விலை சூத்திரத்தை உடன் நடைமுறைப்படுத்துக!

### எரிசக்தி அமைச்சர் கம்மன்பில கோரிக்கை

எரிபொருள் விலை சூத்திரத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை ஸ்திரப்படுத்தல் நிதியத்தை அறிமுகப்படுத்துவதற்கு அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்துள்ளதாகவும் அதற்கு இன்னும் அங்கீகாரம் வழங்கப்படவில்லை எனவும் அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும் எரிபொருள் விலை சூத்திரத்தை மீண்டும் அமுல்படுத்த வேண்டும் என மத்திய வங்கி முன்மொழிந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை ஸ்திரப்படுத்தல் நிதியம் மிகவும் பொருத்தமான பொறிமுறையாகும் என்றும் அது நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், குறைந்தபட்சம் எரிபொருள் விலை சூத்திரத்தையாவது நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிப்புடன் எரிபொருள் விலை அதிகரிக்கப்படாவிட்டால், இழப்பை வரி செலுத்துவோர் அனைவரும் ஏற்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 9 மாகாணங்களிலும் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்த குழு!

## விசாரணையில் அதிர்ச்சித் தகவல்

ஈஸ்டர் தாக்குதல்களின் சூத்திரதாரி என அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட நௌபர் மௌலவி இந்த ஆண்டு நாட்டின் ஒன்பது மாகாணங்களிலும் தாக்குதல்களை நடத்த திட்டமிட்டிருந்தார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எனினும் தலைமைத்துவத்தின் காரணமாக திட்டமிட்டபடி நடக்க முடியாமல் போனமை விசாரணைகளில் தெரியவந்ததாக தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ரொஹான் குணரத்ன ஆங்கில ஊடகமொன்றுக்குத் தெரிவித்தார்

மேலும் நௌபர் தற்போது காவலில் உள்ளார் என்றும் விரைவில் இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

2021 இல் திட்டமிடப்பட்ட தாக்குதல்கள், திட்டத்துடன் தொடர்புடைய ஒவ்வோர் உறுப்பினரும் கைது செய்யப்பட்டு பொலிஸாரின் காவலில் இருக்கின்றமையால் அனைத்தும் சிதைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய அனைவரும் கொல்லப்பட்டுள்ளனர் அல்லது கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் இஸ்லாமிய அரசை விரிவுபடுத்துவதற்கும் ஒன்பது மாகாணங்களிலும் தாக்குதல்களை நடத்துவதற்கும் நௌபர் மௌலவி சித்தாந்தம் கொண்டிருந்தார் எனவும், ஆனால் உடனடியாக தாக்குதல் நடத்த விரும்பிய சஹ்ரானுடன் சர்ச்சையை எதிர்கொண்டார் எனவும் தெரிவித்த அவர், அவர்களின் அணுகு முறைகள் வேறுபட்டவை என்றும் கூறினார்.

மார்ச் 2019 இல் கிறிஸ்ட்சர்ச்சில் இடம்பெற்ற மசூதித் தாக்குதலுக்குப் பின்னர், ஈஸ்டர் தாக்குதல்களை உடனடியாக நடத்தத் தயாராகுமாறு சஹ்ரான் தனது குழுவிற்குத் தெரிவித்தமை விசாரணைகளில் தெரியவந்ததாக அவர் குறிப்பிட்டார்.

விசாரணைகளின்படி, மாகாணங்களில் இரண்டாவது அலை தாக்குதல்களுக்கு சஹ்ரானின் குழு திட்டமிட்டிருந்த இலக்குகளில், அவர்கள் சுதந்திர தின கொண்டாட்டங்கள் உள்ளிட்டவற்றை கண்காணித்ததற்கான ஆதாரங்களும் வெளிவந்துள்ளன என அவர் குறிப்பிட்டார்.

2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் காத்தான்குடியில் சூபி முஸ்லிம்களுடனான மோதலுக்குப் பின்னர் சஹ்ரான் தலைமறைவாகிய பின்னர், தேசிய தௌஹீத் ஜமாத்தை வழிநடத்திய தனது சகோதரர் ஜைனி மௌலவியிடம் சஹ்ரான் இரண்டாவது அலை தாக்குதல்களை ஒப்படைத்தார் என்றும் விசாரணைகளில் தெரியவந்ததாக அவர் குறிப்பிட்டார்.

சஹ்ரானின் சகோதரர்களான ஜைனி மற்றும் ரில்வான் கண்டி எசல பெரஹரா மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்தமைக்கான ஆதாரங்களும் வெளியாகியுள்ளன எனவும் தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ரொஹான் குணரத்ன தெரிவித்தார்.

விசாரணைகளின்படி, கட்டுவாப்பிட்டிய தேவாலயத்தில் வெடிக்கச் செய்த தற்கொலைக் குண்டுதாரியான ஹஸ்துன், இலக்குகளை இணையத்தில் கண்காணித்துள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இரண்டாவது தாக்குதலுக்கு இலக்கானவர்களில் மட்டக்களப்பு தெட்டத்தீவு தேவாலயம் எனப்படும் யூதாஸ் ததேயுஸ் தேவாலயமும் இருந்தது, இது ஹஸ்துனின் மனைவியான சாரா ஜாஸ்மினின் ஸ்மார்ட்போன் மூலம் கண்காணிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த தேவாலயத்தில் சாரா ஜாஸ்மின் மதம் மாறுவதற்கு முன்பும், ஐ.எஸ். சித்தாந்தத்தை எடுத்துக்கொள்வதற்கும் முன்பும் வழிபாட்டிற்குச் சென்றார் என சஹ்ரானின் மனைவி ஹதியா, பொலிஸ் உளவுத்துறை அதிகாரிகளிடம் வெளிப்படுத்தினார் என ரொஹான் குணரத்ன தெரிவித்தார்.

இரண்டாம் அலை தாக்குதல்கள் அதிக உயிரிழப்பை ஏற்படுத்தியிருக்கும் என்றும் ஈஸ்டர் தாக்குதல் குழுவை விட இரண்டாவது தாக்குதல் குழு பெரியதாக இருந்ததாகவும் ரொஹான் குணரத்ன தெரிவித்தார்.

எவ்வாறாயினும், சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகளைக் கண்டறிந்த அப்பகுதி முஸ்லிம்களின் உதவியின் பேரில், அம்பாறையில் உள்ள அவர்களது பாதுகாப்பு இல்லத்தை பொலிஸாரும் இராணுவமும் சுற்றி வளைத்தபோது, இரண்டாவது தாக்குதல் குழு உறுப்பினர்கள் 2019 ஏப்ரல் 26 அன்று சாய்ந்தமருது பாரிய தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்தனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

முஸ்லிம்களின் உதவி இல்லாவிட்டால், இந்த மக்கள் அன்றைய தினம் பிடிபடாமல் இருந்திருக்கலாம் என்றும் பேராசிரியர் குணரத்ன கூறினார்.

பாரிய தற்கொலை சம்பவத்தன்று இரவு, சாய்ந்தமருதில் சாரா ஜாஸ்மின் மற்றும் சியோன் தேவாலய குண்டுதாரியின் மனைவி பெரோசா உட்பட 17 பேர் இருந்தனர் என்றும் பாதுகாப்பு இல்லத்திற்குள் தற்கொலைக் குண்டுகள் வெடிப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு சஹ்ரானின் மனைவி ஹதியா தனது மகளுடன் மண்டபத்தை விட்டு வெளியேறினார் என்றும் அவர் கூறினார்.

மேலும் சாரா ஜாஸ்மின் பாரிய தற்கொலை தாக்குதலில் கொல்லப்படவில்லை என்ற வதந்திகள் பரவியதை அடுத்து, சாரா ஜாஸ்மின் கொல்லப்பட்டாரா என்பதை உறுதிப்படுத்தும் வகையில் சாய்ந்தமருது குண்டுவெடிப்பின் சகல சடலங்களையும் தோண்டி எடுத்து, சாரா ஜாஸ்மினின் தாயாரின் டி.என்.ஏயுடன் பரிசோதிக்குமாறு பொலிஸார் நீதிமன்றத்தில் விண்ணப்பித்துள்ளனர் எனப் பேராசிரியர் குணரத்ன தெரிவித்தார்.

இந்த நிலையில், நீதிமன்ற அனுமதி கிடைத்தால், அதிகாரிகள் மறுபரிசீலனை செய்து அவரது மரணத்தை உறுதிப்படுத்துவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஈஸ்டர் தாக்குதலைத் தொடர்ந்து, தாக்குதலுடன் தொடர்புடைய அனைவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர் எனவும் இரண்டாவது தாக்குதல் அலையைத் திட்டமிட்ட அனைவரையும் கைது செய்துள்ளனர் எனவும் மேலும் தாக்குதல்களை விரும்பாத முஸ்லிம் சமூகத்தினரே சந்தேக நபர்களுக்கு எதிரான பெரும்பாலான தகவல்களை வழங்கினர் எனவும் பேராசிரியர் குணரத்ன தெரிவித்தார்.

இராணுவப் புலனாய்வு மற்றும் அரச புலனாய்வு இயக்குநரகத்தில் பணிபுரியும் சட்ட அமுலாக்க அதிகாரிகளால் எடுக்கப்பட்ட தீர்க்கமான நடவடிக்கை காரணமாக, விரைவான கைதுகள் மற்றும் தீவிர விசாரணைகளைத் தொடர்ந்து இன்று பயங்கரவாத அச்சுறுத்தல் வெகுவாகக் குறைந்துள்ளதாகப் பேராசிரியர் குணரத்ன மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

## கிண்ணியா படகு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, இந்த விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கடந்த ஏப்ரல் 11ஆம் திகதி, நிமல் லன்சா அந்தப் பகுதியில் பாலத்தை அமைப்பதற்கான அடிக்கல்லை நாட்டிய போதும், அது தொடர்பான வேலைத்திட்டம் ஸ்தம்பிதமடைந்திருந்தது என்றும் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில், அங்கு மக்கள் பயணிப்பதற்கான படகுப் பாதை விபத்துக்குள்ளாகியுள்ளது என்றும், அந்த விபத்தில் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசு நிவாரணங்கள் மற்றும் இழப்பீடுகளை வழங்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அதேபோன்று குறித்த படகுப் பாதை இயங்கிய முறை மற்றும் அதன் சட்டப்பூர்வ தன்மை ஆகியன குறித்து முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் சஜித் பிரேமதாஸ சபையில் வலியுறுத்தினார்.

## கத்தி வெட்டில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோடு அவரது கை விரலும் துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது எனச் சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இருவருக்கிடையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கம் கத்திவெட்டில் முடிவடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படுகாயமடைந்தவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## காரைக்கால் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கான இந்திய தூதர் கோபால் பாக்லேவுடன், இந்தியாவின் புதுச்சேரி ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் ஆலோசனை நடாத்தியுள்ளார்.

அரசு முறைப் பயணமாக இலங்கைக்கான இந்திய தூதர் கோபால் பாக்லே தென்னிந்தியாவுக்குப் பயணித்துள்ளார். இதன்போது நேற்று புதுச்சேரி சென்றார். அங்கு ஆளுநர் மாளிகையில், துணைநிலை ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜனை மரியாதை நிமித்தமாக அவர் சந்தித்தார். அப்போது அவர்கள் இந்திய - இலங்கை நாடுகளின் சுமுகமான உறவுகள் குறித்து விவாதித்தனர்.

மீனவர்களின் உயிர், உடைமை பாதுகாப்பு, வாழ்வாதாரம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மனிதாபிமான முறையில் மீனவர்கள் பிரச்சினையை அணுக வேண்டும் என்று துணைநிலை ஆளுநர் கோரியுள்ளார். அதனை ஏற்றுக் கொண்டதூதுவர் மீனவர்களைப் பாதுகாப்பது அரசின் கடமை என்பதைத் தெரிவித்தார்.

காரைக்கால் மற்றும் காங்கேசன்துறை இடையேயான படகுப் போக்குவரத்தினை மீண்டும் தொடங்குவது, இந்தியா – இலங்கை இடையேயான அவசர படகு ஊர்தி (Ambulance Boat) அறிமுகப்படுத்துவது ஆகியவற்றுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது குறித்தும் துணைநிலை ஆளுநர் ஆலோசனை நடத்தினார்.

அவசர வைத்திய சேவையை எதிர்பார்க்கும் மக்களுக்கு இது வரப்பிரசாதமாக இருக்கும் என்று அவர் சுட்டிக்காட்டினார் எனத் தெரிகிறது.

மேலும், தமிழக மீனவர்கள் 21 பேரை இலங்கை அரசு விடுதலை செய்வது குறித்தும் கேட்டறிந்தார். அதில் இரண்டு மீனவர்களுக்கு கொரோனா தொற்று இருப்பதாக தெரிவதால் அவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து புதுச்சேரி சட்டப் பேரவை சென்ற கோபால் பாக்லே முதல்வர் அலுவலகத்தில் முதல்வர் ரங்கசாமியையும் சந்தித்துப் பேசினார்.





## இராணுவ பஸ் மோதி மாணவி உட்பட இருவர் காயம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் - காங்கேசன் துறை வீதி தாவடிச் சந்தியில் பாடசாலை மாணவியை ஏற்றிச் சென்ற மோட்டார் சைக்கிளை இலக்கத் தகடு அற்ற இராணுவ பஸ் மோதித் தள்ளியது.

நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் தலைக்கவசம் அணிந்திருந்த போதும் தலையில் பலத்த காயமடைந்து அதிக குருதி வெளியேறியது. அதே நேரம் மோட்டார் சைக்கிளில் பயணித்த கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவியும் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திய இராணுவ பஸ்ஸில் எந்தவொரு விளக்குகளோ, ஒலி எழுப்பியோ இல்லாததோடு வாகனத்தின் இரு திசைகளிலும் இலக்கத் தகடுகள் அற்றுக் காணப்பட்டன.

இருந்தபோதும் இந்த பஸ் மோட்டார் போ.வ.திணைக்கள பதிவின் பிரகாரம் இராணுவத் தலைமையகப் பதிவைக் கொண்டிருந்தபோதும் விபத்து இடம்பெற்ற பிரதேசத்துக்கு வருகை தந்த இராணுவத்தினர் அது தமது வாகனம் அல்ல எனத் தெரிவித்த நிலையில் பஸ்ஸை சுன்னாகம் பொலிஸார் எடுத்துச் சென்றனர்.

## நேற்று 740 பேருக்கு கொரோனா உறுதி

நாட்டில் மேலும் 740 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய கொரோனாத் தொற்று உறுதியானவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 58 ஆயிரத்து 860 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 418 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதன்படி, நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 27 ஆயிரத்து 528 ஆக அதிகரித்துள்ளது.

## பூநகரியில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் மண்டைதீவிற்கு அண் மையில் உள்ள பூவரசந்தீவு கடற்கரையில் ஞாயிறு அதிகாலை படகில் பயணித்த பாசையூரைச் சேர்ந்த ஒருவரைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்ற நிலையில் அந்த உடலம் அவருடையது என இப்போது கூறப்படுகின்றது.

அன்று அதிகாலை 3 மணியளவில் படகு ஒன்று பாசையூர் கரையை அண்மித்த சமயம் கடற்படையினர் மறைந்திருந்து அதை மடக்கிப் பிடிக்க முற்பட்டபோது அப்படகில் இருந்தவரின் உடலாக இது இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

# பிரசவித்த சிசுவைப் புதைக்கும் முயற்சியைத் தடுத்த அயலவர்கள்

## மட்டுவிலில் காப்பாற்றப்பட்ட குழந்தை

யாழ்ப்பாணம் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மட்டுவில் பகுதியில் இளம் பெண் ஒருவருக்கு பிறந்ததாக கருதப்படும் பச்சிளம் குழந்தை ஒன்றை அந்த இளம் பெண்ணும், அவருடைய தாயாரும் உயிருடன் புதைக்க முற்பட்ட நிலையில் அயலவர்களால் குழந்தை காப்பாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

மட்டுவில் முத்துமாரி அம்மன் கோவிலுக்கு அண்மித்த பகுதியில் 18 வயதுடைய இளம் பெண் தன்னுடைய பச்சிளம் குழந்தை ஒன்றை நிலத்தில் புதைப்பதற்குத் தன் தாயாருடன் சேர்ந்து முனைந்தார் எனவும், அப்போது குழந்தை வீறிட்டு அழுததால் அதைக் கேட்டுத் தாம் அங்கு விரைந்து, அசம்பாவிதத்தை உணர்ந்து, குழந்தையை மீட்டுக் காப்பாற்றினோம் எனவும் பொலிஸாரின் விசாரணைகளின் போது அயலவர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், குழந்தை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



'காலைக்கதிர்' பிரதம ஆசிரியரும், ஸ்தாபக ஆசிரியருமான ம.வ. கானமயில்நாதனின் இறுதிக்கிரியைகள் நேற்று நடந்தன. யாழ்ப்பாணம் கோம்பையன்மணல் மயானத்தில் அவரது பூதவுடல் நேற்று மாலை தீயுடன் சங்கமமாகியது.

# மாவீரர் நினைவேந்தலுக்குத் தடைபோட ஊர்காவற்றுறை நீதிமன்றமும் மறுப்பு!

(ந.லோகதயாளன்)

மாவீரர் நினைவேந்தலுக்குத் தடை உத்தரவு கோரி ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் நேற்று நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முன்னிலையாகுமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊர்காவற்றுறை தொகுதி கிளை செயலாளர் கருணாகரன் நாவலன், தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட வாலிப முன்னணியின் செயலாளர் கருணாகரன் குணாளன், ஊர்காவற்றுறை பிரதேச சபை உறுப்பினர் அம்பலம் கனகையா, ஊர்காவற்றுறை தொகுதி கிளையின் நிர்வாகக் கிளை உறுப்பினர்களான மடுத்தீன் பெனடிக்ற் (சின்னமணி), ரமேஷ் றமில்டன், ருத்ரன் ( நெடுந்தீவு ) ஆகியோருக்கு ஊர்காவற்றுறை பொலிஸாரால் வழங்கப்பட்டிருந்த உத்தரவுக்கிணங்க நேற்று அத்தரப்பினர் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இவர்கள் சார்பாக மூத்த சட்டத்தரணி நல்லையா சிறீகாந்தா ஆஜராகி ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் வாதங்களை முன்வைத்திருந்தார். அவரோடு இணைந்து சட்டத்தரணி அருட்பிரகாசம் நிரோஷன், சட்டத்தரணி சுகாஷ், சட்டத் தரணி ஷாலினி ஆகியோரும் ஆஜராகியிருந்தனர்.



# சம்பந்தன், மாவை, சித்தர், செல்வம் ஐ.நா. உயர் அதிகாரியுடன் பேச்சு!

## கொழும்பில் நேற்று நடந்தது

கொழும்பு, நவம்பர் 24

இலங்கைக்கு மூன்று நாள் விஜயமாக வருகை தந்திருக்கும் ஐ.நாவின் அரசியல், அமைதி உருவாக்கல் விவகாரங்களுக்கான உதவி செயலாளர் நாயகம் காலெட் கியாறியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களான இரா. சம்பந்தன், மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கல நாதன், சித்தார்த்தன் ஆகியோர் நேற்று மாலை சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இந்தச் சந்திப்பு கொழும்புக்கான ஐ.நா. அலுவலகத்தில் நடைபெற்றது.

பேச்சுப் பற்றிய விவரங்கள் இவ்விதழ் வெளியாகும் வரை கிடைக்கவில்லை.

கூட்டமைப்பின் முக்கியஸ்தரான சுமந்திரன் கனடாவில் நிற்கின்றமையால் இந்தச் சந்திப்பில் பங்குபற்றவில்லை.

# தமிழ்ப் பத்திரிகை உலகை கம்பீரமாக துணிச்சலுடன் வழிநடத்தியவர் கானம்!

## யாழ் ஊடக மன்றம் இரங்கல்

நெருக்கடியான காலத்திலும் தமிழ்ப் பத்திரிகை உலகை கம்பீரமாக துணிச்சலுடன் வழிநடத்தியவர் ம.வ.கான மயில்நாதன். தமிழிற்கும் தமிழர்களுக்கும் பத்திரிகைத் துறையில் இவர் செய்த சேவை என்றும் மறக்க முடியாதது என யாழ் ஊடக மன்றம் இரங்கல் வெளியிட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ம.வ. கானமயில்நாதன் 1942 ஆம் ஆண்டு ஜூலை 25 ஆம் திகதி பிறந்தார். ஓய்வு பெற்ற நிலையிலும் ஊடகப் பணியைத் தொடர்ந்த இளைஞன் என்றால் மிகையல்ல.

அந்தளவிற்கு தனது வாழ்நாள் முழுவதையும் பத்திரிகைக்காக அர்பணித்தமை மாத்திரமன்றி ஈழத்து பத்திரிகை ஜாம்பவான்கள் என்று குறிப்பிடத்தக்க ஆசிரியர்களான எஸ்.கோபாலரட்ணம், சிவகுருநாதன், எஸ்.டி. சிவநாயகம் ஆகியோரின் வரிசையில் தன்னையும் தடம்பதித்தார்.

தனது ஊடக பயணத்தை ஈழநாடு ஆசிரியர் பீடத்தில் ஆரம்பித்து, தினபதி பத்திரிகையின் செய்தி ஆசிரியராகக் கடமையாற்றிய போது 1983 கலவரத்தின் பின்னர் யாழ்.வந்த இவர் 1985 ஆம் ஆண்டு உதயன் பத்திரிகை உருவாக்கப்பட்டு, அன்றிலிருந்து தொடர்ச்சியாக பலவருடங்கள் பத்திரிகைத் துறையில் பிரதம ஆசிரியராக தனது ஊடகப் பணியில் அசைக்க முடியாத முத்திரையைப் பதித்தார். இறுதியாக காலைக்கதிர் பத்திரிகையின் ஆசிரியர் பீடத்திலும் பங்களித்தார்.

சிறந்த வழிகாட்டியாகவும் பண்பாளனாகவும் தன்னை நிலைநிறுத்திய பத்திரிகை ஆசான் இவர்.

ஈழத்து பத்திரிகை வரலாற்றிலேயே தொடர்ச்சியாக ஆசிரியராக இருந்து நெருக்கடியான போர்ச் சூழலிலும் ஊடக அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் தனது இலக்கில் சிறிதும் தடம் மாறாது இன்றுவரை பயணித்துக்கொண்டிருந்த மூத்த ஊடகவியலாளர் ம.வ.கானமயில்நாதன் ஊடகப்பரப்பிலுள்ள இளையோருக்கு ஓர் எடுத்துக்காட்டு எனலாம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அவரது உற்றார், உறவினர், நண்பர்களுக்கு யாழ். ஊடக மன்றம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றதெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கொவிட் தொற்று, டெங்கு ஒழிப்பு; யாழ். மாவட்ட செயலணி கூடி ஆராய்வு

(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,நவ.24

யாழ்.மாவட்டத்தில் கொரோனாத் தொற்று மற்றும் டெங்கு ஒழிப்பு தொடர்பாக மாவட்ட கொரோனா ஒழிப்பு செயலணி கூடி ஆராய்ந்தது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மையில் கொரோனாத் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை சற்று குறைவடைந்த நிலையில் கடந்த வாரத்திலிருந்து அந்த எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் மாவட்ட கொரோனா செயலணி நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 10 மணிக்கு யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கூடி ஆராய்ந்தது.

மேற்படி செயலணிக் கூட்டத்தின்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போதுள்ள நிலைமையில் எடுக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளதுடன், மேலும் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதன் காரணமாக டெங்குத் தொற்று நிலைமை மற்றும் அனர்த்த முகாமைத்துவ விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பிரதீபன், 51 ஆவது படைப் பிரிவின் இராணுவத் தளபதி சந்தன விக்ரம சிங்க, யாழ் போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர், முப்படை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், உள்ளூராட்சி சபைத் தலைவர்கள், சுகாதார அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பீடை கொல்லிப் பதிவாளர் பதவிநீக்கம் செய்யப்பட்டார்

பீடைகொல்லி பதிவாளர் உடன் அமுலுக்கு வரும் வகையில் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயத்துறை அமைச்சின் செயலாளர் ஜயசூரிய உடுகும்புரவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7 வருடங்களாக தடை செய்யப்பட்டிருந்த 5 பீடைக் கொல்லி வகைகளுக்கான தடையை நீக்கியமை தொடர்பில் அவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இதற்கமைய பீடைகொல்லி பதிவாளரால் 2021.11.01 வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை செயலிழக்க செய்வதுடன் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## முஸ்லிம் ஆன்மீகத் தலைவர் நஸீம் பிரதமரை நேற்று சந்தித்தார்





தென்னிந்திய முஸ்லிம் ஆன்மீகத் தலைவர் அஷ் ஷெயிக் கலாநிதி தைக்கா அஹமத் நஸீர் அலீம் நேற்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்தார்.

அவர் காலஞ்சென்ற இந்திய முஸ்லிம் ஆன்மீகத்தலைவரான அஷ் ஷெயிக் கலாநிதி தைக்கா சுஹாய்ப் அலீமின் புதல்வராவார்.

மத நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளக் கூடிய பணிகள் தொடர்பாக இந்தச் சந்திப்பின் போது கலாநிதி தைக்கா அஹமத் நஸீர் அலீம் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு சென்றார்.

கலாநிதி தைக்கா அஹமத் நஸீர் அலீம், இந்நாட்டின் மஹா சங்கத்தினர் மற்றும் இஸ்லாம் மத குருமார்கள் ஆகியோரையும் சந்திக்கவுள்ளார்.

மேற்படி சந்திப்பின் போது கலாநிதி அக்ரஹெர கஸ்ஸப தேரர் கலந்து கொண்டிருந்தார்.

கலாநிதி தைக்கா அஹமத் நஸீர் அலீமுடன் வருகைத்தந்திருந்த முஸ்லிம் மதத் தலைவர்களும் பிரதமருடனான சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## அருட்தந்தை சிறில் காமினிக்கு எதிரான விசாரணை குறித்து ஐ.நாவில் முறைப்பாடு

அருட்தந்தை சிறில் காமினிக்கு எதிரான விசாரணைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அருட்தந்தை சிறில் காமினியிடம் விசாரணை நடத்துவதன் மூலம் அவரை அழுத்தங்களுக்கு உள்ளாக்குவதாக ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சுமத்தியுள்ளது.

அருட்தந்தைக்கு எதிரான விசாரணைகள் தொடர்பாகக் கவனம் செலுத்துமாறு ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான அலுவலகத்தில் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன உள்ளிட்டவர்கள் இந்த முறைப்பாட்டை செய்துள்ளனர்.

குண்டுத்தாக்குதல் நடத்தப்படக்கூடிய நபர்கள் பற்றிய விவரங்கள் உண்டு என கூறிய ஞானசார தேரரிடம் விசாரணை எதுவுமில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

குண்டுத் தாக்குதல் பற்றி கூறிய ஞானசார தேரரிடம் விசாரணை நடத்தப்படவில்லை, நிலந்த ஜயவர்தனவிடம் விசாரணையில்லை. ஜனாதிபதி விசாரணைக் குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை.

இவ்வாறான ஒரு பின்னணியில் அருட்தந்தை சிறில் காமினியை மட்டும் விசாரணைக்கு உட்படுத்துவதும் அழுத்தங்களைப் பிரயோகிப்பதும் கண்டிக்கப்பட வேண்டியது என காவிந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

## 8 காட்டு யானைகள் வவுனியாவில் சாவு

வவுனியா மாவட்டத்தில் காட்டு யானைகள் எட்டு உயிரிழந்துள்ளன என மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா மாவட்டத்தில் இந்த வருடம் இதுவரையான காலப்பகுதியில் செட்டிகுளத்தில் 3, நெடுங்கேணியில் 3, வவுனியாவில் 2 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன.

மேலும் காட்டு யானைகள், மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைகின்றதுடன் மக்களின் வாழ்வாதாரங்களையும் அழித்தொழிக்கும் நடவடிக்கையையும் மேற்கொள்கின்றது. ஆகையால் மக்கள் தொடர்ச்சியாகக் காட்டு யானைகளின் அச்சுறுத்தல்களுடன் வசித்து வருகின்றனர். கடந்த வருடம் வவுனியா மாவட்டத்தில் 10 யானைகள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.11.2021 இல் வெளியிடப்பெற்றது.